விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

விஷேட பிரதி

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 04 ஞாயிற்றுக்கிழமை (17.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 119

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

### அரசு-புலிகள் மீது பலத்த குற்றச்சாட்டு

# பத்தாயிரக் கணக்கான மக்கள்

# 2009 ஆரம்பத்தில் பலியாகினர்

## ஐ.நாவின் அறிக்கையில் அம்பலம்



(கொழும்பு)

2009ஆம் ஆண்டு ஆரம்பத்தில் பத்தாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் கடைசி கட்டத்தில் அரச படையினரும் தமிழீழ விடுதலைப்புலிகளும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை மீறிச் செயற்பட்டுள்ளதான நம் பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உள்ளதாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் உயிரிழப்பு இல்லாத கொள்கையுடன் மனிதாபிமான மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டதாக அரசாங்கம் கூறியது. ஆனால் அதற்கு முரணாக அரசாங்கத்தினாலும் தமிழீழ விடுதலைப்புலிகளினாலும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள், சர்வ தேச மனித உரிமைச் சட்டங்கள் ஆகியவை (நிரூபிக்கப்படின்) பரந்தளவில் மீறப்பட்டதாக சுட்டிக்காட்டும் நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களை நிபுணர் குழு கண்டறிந்துள்ளது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மூன்று பேர் கொண்ட நிபுணர் குழு கடந்த செவ்வாய்க்கிழமை தனது அறிக்கையை ஐ.நா.செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (19ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு பதிலளிக்க நால்வர் அடங்கிய குழு!

(கொழும்பு)


இலங்கையில் போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைக்குப் பதிலளிக்க நால்வரடங்கிய குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது.

அதேநேரம் இலங்கை அரசாங்கம் சார்பில் குறித்த அறிக்கைக்கு எதிராக உத்தியோகபூர்வமான கருத்துகள் எதனையும் வெளியிடுவதில்லை என்றும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் திஸ்ஸ விதாரண அறிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள நால்வர் குழுவானது நிபுணர் குழுவின் அறிக்கையை கவனமாக ஆராய்ந்து அதற்கான பதிலைத் தயார் செய்வர் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நிபுணர் குழுவின் அறிக்கையின் பாரதூரம் காரணமாக இராஜதந்திர வழிகளில் மட்டுமே அதனை எதிர்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அலரிமாளிகைத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## ஆயுதக் கொள்வனவில் பொன்சேகா? அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான ஆயுதப் புரட்சிக்கு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தயாராகி வருவதாக பலமான சந்தேகம் தோன்றியுள்ளது.

சைபிரஸ் நாட்டில் இருந்து ஆயுதத் தயாரிப்பு நிறுவனமொன்று ஜோர்டான் ஊடாக அனுப்பியுள்ள மர்மப் பொதி ஒன்று குறித்து விபரங்கள் (02ஆம் பக்கம் பார்க்க)




## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்!

### எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்தல்

(ஒஸ்லோ)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கை நிச்சயம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமெனவும் இறுதிக் கட்டப் போரில் தமது உற்ற உறவுகளை இழந்தவர்களுக்கும் நடந்தவற்றுக்கான பதிலைத் தேடுவோருக்கும் அது அவசியமானது என நோர்வேயின் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றிருக்கக் கூடிய போர் மீறல்கள் தொடர்பான அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த அறிக்கை இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டுமென நோர்வேயின் அனைத்துலக அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் நோர்வே நாளிதழ் ஒற்றுக்குத் (02ஆம் பக்கம் பார்க்க)

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்

• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு



SINGER®

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Hurry......for Jan-2011
Intake Get Register Now
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# இலங்கையை பற்றி கவலை தேவையில்லை - ஐ.தே.க

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமைகள் குறித்து அமெரிக்கா கவலைப்படத் தேவையில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர இந்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்கா பல வருடங்களாக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில் அந்த நாடு ஏனைய நாடுகளின் மனித உரிமை மீறல்கள் குறித்து கவலை கொள்வதில் அர்த்தமில்லை என்று ஜெயசேகர குறிப்பிட்டுள்ளார். (ச-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# சுற்றுலா சென்ற மாணவன்

## கடலில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுற்றுலா சென்றவேளை கேரதீவு சங்குப்பிட்டி கடற்பரப்பில் காணாமல்போன மாணவன் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் ஒன்பதாம் தரத்தில் கல்வி கற்கும் சிறிகாந் நிமலன்(வயது 14) என்ற மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

பிரத்தியேகமாக கல்வி கற்கும் மாணவர்கள் நேற்று முன்தினம் சுற்றுலாப் பயணம் ஒன்றை மேற்கொண்டதாகவும், கேரதீவு சங்குப்பிட்டி கடலில் அவர்கள் நீராடிய வேளை பிரஸ்தாப மாணவன் காணாமல் போனதாகவும் கூறப்படுகின்றது.

காணாமல்போன மாணவன் நிமலனை கடற்தொழிலாளர்களும் படையினருமாக தேடுதல் நடத்தியதில் நேற்று மாலை ஐந்து மணியளவில் அவரின் சடலம் மீட்கப்பட்டது. (ந)

# தூக்கில் தொங்கியபடி

## பல்கலை மாணவனின் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தட்டாதெருப் பகுதியில் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் தூக்கில் தொங்கியபடி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் முதலாம் வருட மாணவன் தங்கராசா நிரஞ்சன் (வயது 22) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

பிரஸ்தாப மாணவன் நேற்றைய தினம் நாச்சிமார் கோயில் தேர்த் திருவிழாவிற்கு செல்வதற்கு ஆயத்தமாகியுள்ளார்.

குடும்பத்தவர்கள் முன்கூட்டியே கோயிலுக்குச் சென்றிருந்தனர்.

தேர்த்திருவிழா முடிந்து முற்பகல் 11 மணியளவில் குடும்பத்தவர்கள் வீடு திரும்பியபோது பிரஸ்தாப மாணவன் சால்வை ஒன்றில் தொங்கியபடி சடலமாகக் கிடப்பதை கண்டுள்ளனர்.

இதை அடுத்து பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோனைக்குட்படுத்தப்பட்டபின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ந-6)

# ஐ.நா. நிபுணர் குழுவின்...

தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அதில் வெளிவந்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கத்தின் கடும் எதிர்ப்புகளையும் மீறி ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையில் இரு தரப்பாலும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர் மீறல்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள நிபுணர்கள் குழு அமைக்கப்பட்டது.

அறிக்கை பகிரங்கப்படுத்தப்படுவதற்கு முன்னர் அது தொடர்பாக கருத்துரைப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு ஐ.நா. ஒரு வாய்ப்பினை வழங்கியுள்ளது.

பொருத்தமான நேரத்தில் உரிய முறையில் பான் கீ மூன் அதனைப் பகிரங்கப்படுத்துவார் என நான் அவர் மீது நம்பிக்கை கொண்டுள்ளேன்.

நடந்திருக்கக் கூடிய யுத்தமீறல்கள் தொடர்பான அறிக்கை இறுதிக் கட்டப் போரில் தமது உற்ற உறவுகளை இழந்தவர்களுக்கும், என்ன நடந்தது என்பதற்கான பதிலைத் தேடுவோருக்கும் அவசியமானது. இறுதிப் போரின் போது எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பது தொடர்பான மாறுபட்ட தரவுகள் உள்ளன. கொல்லப்பட்டோர் எண்ணிக்கை பற்றிய உறுதியான தரவுகள் தெரியாவிட்டாலும் அது பல ஆயிரம் பேர் என்பது தெளிவாகியுள்ளது. இலங்கையில் ஒரு அரசியல் விளைவினை இந்த அறிக்கை ஏற்படுத்துமா? என்பதை ஊகிக்க முடியாதுள்ளது.

போருக்குப் பின்னான இன நல்லிணக்கம் தொடர்பான இலங்கையின் செயற்பாடுகள் குறித்து மதிப்பிடுமாறு சொல்ஹெய்மிடம் கேட்டபோது, தமிழ் மக்களுக்கு நேசக் கரம் நீட்டுமாறும் ஒரு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்துமாறும் நோர்வேயும் வேறு பல நாடுகளும் அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை எதிர்வரும் பத்து நாட்களுக்குள் பகிரங்கப்படுத்தப்படுமென சனல் 4 தொலைக்காட்சி செய்தியில் அறிவிக்கப்பட்டதாக அந்த நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# வல்லைப் பகுதியில் விபத்து

(யாழ்ப்பாணம்)

வல்லைப் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நிறுத்திவைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்துடன் முச்சக்கரவண்டி மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (எ-6)

# விபத்தில் வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

வேகக் கட்டுப்பாடடையிழந்த கன்ரர் வாகனம் - மோட்டார் சைக்கிளில் மோதியதில் வயோதிபர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் கைதடிப் பாலத்தில் இடம்பெற்றுள்ளது. இதில் சாவகச்சேரியைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை நவரத்தினம் (வயது 60) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தை நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை பின்னால் வந்த கன்ரர் வாகனம் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தையடுத்து சாவகச்சேரிப் பொலிஸார் கன்ரர் வாகன சாரதியை கைது செய்துள்ளனர். இவர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கைதடிப் பாலத்தில் இவ்வாறு தொடர்ச்சியாக விபத்து இடம்பெற்றுவருவதோடு பலர் உயிரிழக்கவும் நேரிடுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-6)

# ஆயுதக் கொள்வனவில்...

வெளியானதைத் தொடர்ந்தே மேற்படி சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் வலுத்துள்ளது.

தற்போது சிறையில் இருக்கும் அவர் அதற்குள் இருந்தபடியே ஜனாதிபதிக்கு எதிரான ஆயுதப் புரட்சிக்கான சாத்தியப்பாடுகள் குறித்து தனக்கு நம்பிக்கையானவர்களுடன் கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டு வருவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

அத்துடன் அவர் இராணுவத் தளபதியாக இருந்த காலத்திலிருந்தே ஆயுதப்புரட்சி குறித்த சிந்தனையைக் கொண்டிருந்துள்ளதுடன், உலகின் பல நாடுகளிலிருந்தும் இராணுவத் தளபாடங்களை இரகசியமாகக் கொள்வனவு செய்யும் முயற்சிகளையும் மேற் கொண்டிருந்ததாகவும் தற்போது ஆதாரங்கள் வெளிவந்துள்ளன. (ச-5)

**வீடு விற்பனைக்கு**

இல.67, மூத்த விநாயகர் வீதி, நல்லூரில் நல்ல சுற்றாடலில் 1 1/2 பரப்பு காணியில் அமைந்த புதிய மாடி வீடு உடனடியாக விற்பனைக்குண்டு.
தொடர்புக்கு: 0770870769
(4601)

**காணி விற்பனை**

மானிப்பாய் வீதியில் ஒட்டு மடத்திற்கும் ஆறுகால்மடத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் 17 1/2பரப்பு காணி விற்பனைக்குண்டு.
T.P: 0217903585,
0777393653
(4468)



கைத்தொலைபேசி
இலவசம்
Antivirus



**PC House PLC**
1K, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4920572, 0777555855
U_Shukoor@pch.lk, jaffna@pch.lk
PC House PLC நிறுவனத்தில் கொள்வனவு செய்யும் Desktop Computer மற்றும் Laptop Computer உடன் Karbonn K.316 கைத்தொலைபேசி மற்றும் Antivirus இனை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
(சி-2992)

## 7ஆம் மாத நினைவலைகள்

### அமரர் சந்திரசேகரம் பவானிதேவி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 18 | 19 |
| 08 | 09 |
| 1956 | 2010 |

அன்பெனும் சொல்லிற்கே
அடையாளமாகி நின்றீர்
அரவணைத்து எமையெல்லாம்
அன்புமழை பொழிந்து நின்றீர்
உண்மை அன்பின் உருவமாய்
இமயமாய் உயர்ந்து நின்றீர்
வாழ்வில் நாம் உயர்வடைய
கலங்கரை விளக்கானீர்
தனிமையில் எமை விட்டு
எங்கேதான் சென்றீர் நீர்?

கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

சி-2991

# நோயாளர்களை பார்வையிடும் நேரத்திற்கு முன்பாக அனுமதிக்குமாறு கோரி தகராறு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடுவதற்கென ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு முன்பாக பார்வையிட அனுமதிக்குமாறு கோரி நபரொருவர் தகராறில் ஈடுபட்டுள்ளார். அத்துடன் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டவருடனும் கைகலப்பில் ஈடுபட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் இடம் பெற்றுள்ளது.மேற்படி சம்பவம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் தலைமை காவலாளி தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் இது போன்ற பல சம்பவங்கள் இடம் பெற்று வருகிறது. நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு முன்பாகவும் பின்பாகவும் பலர் நோயாளர் விடுதிகளில் தங்கி நிற்கின்றனர்.

இவர்களை விடுதிகளை விட்டு வெளியேறுமாறு கூறும்போது பலர் எம்முடன் முரண்படுகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் கைகலப்பு ஏற்படுவதும் வழக்கமாகி விட்டது.

இது போன்ற சம்பவம் ஒன்று நேற்றும் இடம்பெற்றுள்ளது. நேற்றையதினம் காவலாளியின் அனுமதியின்றி உட்சென்ற நபர் அனுமதிக்கப்பட்ட பாதையூடாக பயணிக்காமல் தடைவிதிக்கப்பட்ட முன்பக்க வழியூடாக அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு முன்பு உட்பிரவேசிக்க முற்பட்ட போதே இக்கைகலப்பு ஏற்பட்டது. இதேவேளை அண்மையில் பின்புற வாசலில் கடமையில் ஈடுபட்டிருந்த பெண் காவலாளியை இனம் தெரியாத நபர் தனது தலைக்கவசத்தால் பலமாகத்தாக்கி விட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற்று வருவதோடு நோயாளிகளை பார்வையிட வருபவர்களுக்கிடையிலும் காவலில் உள்ளவர்களுக்கிடையிலும் ஏற்படும் பிரச்சினை தீர்க்கப்படாத விடயமாகவே யுள்ளது. (ஸ்ரீ-2-6)

# கண்ணாடி வழங்கலும் கௌரவிப்பு நிகழ்வும்

(பருத்தித்துறை)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் கண் பரிசோதனை செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கண்ணாடி வழங்கும் வைபவம்இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நெல்லியடி செவிப்புலனற்றோர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 5.45 மணிக்கு பணிப்பாளர் சபைக் கூட்டமும் மாதாந்தப் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

விசேட நிகழ்வாக இலங்கை வங்கியின் வடமாகாண செயற்பாட்டு முகாமையாளராக இருந்து ஓய்வுபெற்ற வடமராட்சி லயன்ஸ் கழக முன்னாள் தலைவர் லயன் வி.எஸ் சிவநாதனின் கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ-3-10)

# வாரம் ஒரு தகவல்

## உங்களிடம் ஒரு யோசனை

"சேர்...ஒரு முக்கிய விடயம் சம்பந்தமாக உங்களிடம் யோசனை கேட்க வேண்டும்".

"கேளுங்க... சொல்கிறேன்"

"உடம்பில் பச்சை குத்திக் கொள்கிறார்களே...அதை அழிப்பதற்கு வழி உண்டா?"

"இதுவரைக்கும் இல்லாமல் தான் இருந்தது. இப்பொழுது அதற்கும் ஒரு வழியைக் கண்டு பிடித்துவிட்டார்கள்.

"யார் கண்டு பிடித்தது?"

பிரிட்டனில் உள்ள NHS ஆஸ்பத்திரியில் உள்ளவர்கள்"

"எப்படி"

" லேசர் கதிர் மூலமாக அவர்கள் அந்தச் சிகிச்சையைச் செய்கிறார்கள்.வலி இருக்காது.காயம் இருக்காது.அந்த இடத்தில் தழும்பு கூட இருக்காது.பச்சை குத்திய சுவடே இல்லாமல் போய்விடும்"

"இந்த சிகிச்சை முறை கொஞ்ச காலத்தில் நம் நாட்டிற்கும் வருமல்லவா"

"ஆமாம் வரும்"

"அப்படியானால் பரவாயில்லை. இனிமேல் துணிச்சலாக காரியத்தில் இறங்குவேன்."

"என்ன செய்யப் போறீங்க?"

"ஒரு தலைவரிடம் தொண்டனாக சேரவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அவர் பெயரையும் உருவத்தையும் என் கையில் பச்சைகுத்திக் கொண்டால் தான் என்னை சேர்த்துக் கொள்வார்."

"நீங்க முன்யோசனையுள்ள தொண்டர் போலிருக்கு... அது சரி, இப்படியொரு புத்திசாலித்தனமான யோசனையை என்னிடம் வந்து கேட்கவேண்டும் என்று எப்படி உங்களுக்கு தோன்றியது?"

"நீங்கள் ஏற்கனவே 3 தடவை கட்சி மாறியவர் என்ற இரகசியம் எனக்குத் தெரியும்,"

"ஹி"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவடைந்ததும் "சனாதன தர்மம் - 9" என்னும் விடயம் பற்றி ஓய்வு பெற்ற அஞ்சல் பாடசாலை அதிபர் ரி.ரி. சண்முகநாதன் ஆன்மீக சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-3-35)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை வித்தகபுரம் கிராமத்தில் வீடமைப்பு அதிகாரசபையின் கடன் திட்டத்துடன் மானியம் வழங்குதல் சம்பந்தமான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கிராம அலுவலர் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து மக்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3)

# தாக்குதல்களுக்கிலக்கான இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

காணி எல்லை தொடர்பில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக மூவர் இணைந்து தாக்கியதில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் வட்டுக்கோட்டையில் இடம் பெற்றுள்ளது.

இதில் அப்பகுதியைச் சேர்ந்த க. மயூரதாஸ் என்பவரே தலையில் பலமாக தாக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, வேலி அடைப்பதற்காக தமது காணி எல்லையை ஒழுங்கு படுத்திய போதே குறித்த நபர் தாக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபரை தடியால் தாக்கிய மூவரையும் வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஸ்ரீ-6)

# இராசி பலன்

17.04.2011
(சித்திரை 04, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
சதுர்த்தசி முற்பகல் 11.28 மணிவரை
அத்தம் பிற்பகல் 3.30 மணிவரை
இராகு காலம்: 4.34-6.04 மணிவரை
சுபநேரம்: 9.04-10.34 மணிவரை
சித்திரா பௌர்ணமி விரதம், சித்திர குப்த விரதம், அமிர்தசித்தம், குருத்தோலை ஞாயிறு.

**மேடம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள். முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**இடபம்** முன்னோர் சொத்துகளால் நன்மை உண்டு. எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். பிள்ளைகள் வழியில் சுபசெய்திகள் வந்துசேரலாம்.

**மிதுனம்** புதிய நண்பர்களின் அறிமுகம் கிட்டும். மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நடைபெறலாம். பொருட் சேர்க்கையுண்டு. பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**கடகம்** உறவினர், நண்பர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். பிரயாண நன்மையுண்டு. தொழிலில் ஆர்வம் கொள்வீர்கள்.

**சிங்கம்** எடுத்த கருமங்கள் கைகூடும் நாள். உடன்பிறப்புகள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். வியாபார நன்மையுண்டு. பயணங்களால் பயனுண்டு.

**கன்னி** உடல் நலனில் கவனம் தேவை, தெய்வீக சிந்தை மேலோங்கும். நல்லவர்களின் தொடர்பு அதிகரிக்கும். கற்பனைகளை வளர்ப்பீர்கள்.

**துலாம்** காரிய வெற்றிக்கு கதிரவனை வழிபடவேண்டிய நாள். உற்றார், உறவினர் உதவிக்கரம் நீட்ட முன்வருவர். சுபசெலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** உள்ளம் மகிழும் செய்தியொன்று மாலை நேரத்தில் வந்துசேரலாம். பெரிய மனிதரின் சந்திப்பு நிகழலாம். விருந்து பசாரத்தில் கலந்துகொண்டு மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். உறவினர்கள் உங்கள் மனம்போல நடந்து கொள்வர். நல்ல செய்திகள் வந்து சேரலாம். போசன சுகமுண்டு.

**மகரம்** பூர்வீகச் சொத்துகளால் நன்மையுண்டு. நட்பு வட்டம் விரிவடையும். புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்பாராத பகைகள் அகலும்.

**கும்பம்** வரவும் செலவும் சமனாகும் நாள். பொதுவாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்ப்பது நல்லது. பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம்.

**மீனம்** சிறப்பாக பிரகாசித்து பெரியோரின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். ஆலய வழிபாட்டால் ஆனந்தம் பெறுவீர்கள். ஆரோக்கியமான நாள்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 100 |
| தக்காளி | 70-80 | 100 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 50 |
| கோவா | 80 | 100 | 90 |
| கரட் | 20 | 200 | 180 |
| பூசணி | 40 | 60 | 50 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 130 |
| பெரிய வெங்காயம் | 50 | 80 | 75 |
| பாகற்காய் | 100 | 140 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 60 |
| கரணைக்கிழங்கு | - | 70 | - |
| பயிற்றங்காய் | 130 | 120 | 80 |
| லீக்ஸ் | 100-110 | 130 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 110 | 150 | 100 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 500 |
| போஞ்சி | - | 160 | - |
| கத்தரி தம்புள்ள | - | 50 | 50 |
| கீரை - 1 பிடி | 18 | 30 | 20 |
| தேசிக்காய் | 70 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50-60 | 50 |

# உலகக் கிண்ண கிரிக்கெட் பரிசுப் போட்டி முடிவுகள்

நடந்து முடிந்த பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரை முன்னிட்டு உங்கள் வலம்புரி பரிசுப்போட்டி நடாத்தியது. தினம் ஒரு பரிசு என்ற மாபெரும் பரிசுப்போட்டியில் வெற்றிபெற்றோர் மற்றும் சரியான விடையை எழுதிய வாசகர்களின் விபரங்கள் இங்கு பிரசுரமாகின்றன.

இப் பரிசுப் போட்டிக்கு பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் தமது பங்களிப்பை வழங்கி ஆதரவையளித்தனர். அத்துடன் சரியான விடையை எழுதி ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை சமர்ப்பித்தனர். இவ்வாறு ஆதரவு வழங்கிய வாசகர்களாகிய உங்களுக்கு வலம்புரிக் குடும்பம் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது. அத்துடன் இப்பரிசுப் போட்டிகளை நடாத்துவதற்கு அனுசரணை வழங்கிய ஒலிம்பியா ஸ்போட்ஸ், M.C.S, அல்டி எலக்ரோனிக், நவகலா, Suntel ஆகிய நிறுவனங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

## தினம் ஒரு பரிசு – 10

***தற்போதைய உலகக் கிண்ணத்தின் எடை எவ்வளவு?***

**விடை :- 11 கிலோகிராம்**

**பரிசு பெறுபவர் :- க.தார்மீகன் (சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

நெ.அனோஜ் (அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்), கு.குபேரன் (சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்), செ.கஜானன் (விடத்தற்பளை, மிருசுவில்), ஜெ.ஜெயக்கமலன் (அளவெட்டி வடக்கு, அளவெட்டி), சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்), சி.கனகராஜா (பிறவுன் வீதி, கொக்குவில் கிழக்கு), ச.சுகிர்தா (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), இ.குயின்சலா (செம்மணி வீதி, நாயன்மார்கட்டு), த.சுஜேந்திரா (மணற்தறை வீதி, கந்தர்மடம்), றூ.கம்சிகாந் (பாரதி வீதி, நாயன் மார்கட்டு), ப.உதயகுமார் (மஞ்சத் தடி வீதி, இணுவில் கிழக்கு), இ.யுரேனஸ்ட் (உதய சூரியன் வீதி, உடுவில்), இ.பிரணவநாத் (புதுவளவு, கோப்பாய் தெற்கு), த.நீலலோகன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), கு.சுபர்ண விழி (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி), வி.விமல்ராஜ் (கற்பக்குளை, கந்தரோடை), ஐ.முருகமூர்த்தி (கொத்தியாவத்தை, சுன்னாகம் மேற்கு), செ.செந்தூரன் (பிரம்படி வீதி, கொக்குவில்), க.கலையமுதன் (இராமநாதன் கமம், மருதநகர்), வி.சாமினி (அல்வாய் கிழக்கு, அல்வாய்)

## தினம் ஒரு பரிசு – 11

***இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான மோதலில் வெற்றி யாருக்கு?***

**போட்டி சமநிலையில் முடிவடைந்தது. இதனால் சரியான விடை சமர்ப்பிக்கப்படவில்லை.**

## தினம் ஒரு பரிசு – 12

***இலங்கை அணி 1996 இல் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியபோது, இறுதிப்போட்டியில் ஆட்ட நாயகன் யார்?***

**விடை :- அரவிந்த டி சில்வா**

**பரிசு பெறுபவர் :- அ.டினோஸ்ரன் (76, அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

நெ.அனோஜ் (அடம்பன் வீதி, யாழ்ப்பாணம்), கு.குபேரன் (சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்), செ.கஜானன் (விடத்தற்பளை, மிருசுவில்), த.சுஜேந்திரா (மணற்தறை வீதி, கந்தர்மடம்), றூ.கம்சிகாந் (பாரதி வீதி, நாயன்மார்கட்டு), த.நீலலோகன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), கு.சுபர்ணவிழி (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி), க.கலையமுதன் (இராமநாதன் கமம், மருதநகர்), ஆர்.தர்மலிங்கம் (குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை), சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்), இ.குயின்சலா (செம்மணி வீதி, நாயன் மார்கட்டு), இ.யுரேனஸ்ட் (உதய சூரியன் வீதி, உடுவில்), செ.செந்தூரன் (பிரம்படி வீதி, கொக்குவில்), ஏ.ஜெயந்தன் (டேவிட் வீதி, யாழ்ப்பாணம்), தே.ஜனந்தன் (சரசாலை தெற்கு, சாவகச்சேரி), யோ.காண்டீபன் (சோதி வேம்படி ஒழுங்கை, மானிப்பாய்), யோ.பிறேமிளா (பெரிய புலம் வீதி, நாரந்தனை), பு.சிவதாஸ் (நாகபூசணி அம்மன் வீதி, கோண்டாவில் கிழக்கு), பொ.கிருசாந்தன் (அம்பாள் குளம், கிளிநொச்சி), பா.சோஜிந்தன் (அளவெட்டி தெற்கு, அளவெட்டி), க.சுதாகரன் (7ம் வட்டாரம், நயினாதீவு), த.அஜந்தன் (ஸ்கந்தபுரம், கிளிநொச்சி), அ.நீ.குலேந்திரன் (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), ஆ.கேதீஸ்வரன் (குருமதவடி ஒழுங்கை, ஆனைக்கோட்டை), ந.விக்னேஸ்வரன் (பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு), கே.அரசேஸ்வரன் (கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு), ச.சிவசுப்பிரமணியம் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), தா.தவக்குமாரன் (பண்டாரிக்குளம் மேற்கு வீதி, நல்லூர்), உ.டிலக்சனா (நாவலர் வீதி, அரியாலை), கி.சிவராசபவன் (குரும்பைகட்டி, புலோலி வடமேற்கு), ப.சசிகரன் (5ம் வட்டாரம், நயினாதீவு), க.தார்மீகன் (கப்பம்புலம், சுன்னாகம் கிழக்கு), சி.செந்தில்நாதன் (ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு), க.கந்தசாமி (குமரப்புலம் மூளாய், சுழிபுரம்), க.கபிலன் (நீர்வேலி வடக்கு, நீர்வேலி), க.கஜமுகன் (பளை, கிளிநொச்சி), செ.கஜானன் (விடத்தற்பளை, மிருசுவில்), ப.உதயகுமார் (மஞ்சத்தடி கோயில், இணுவில்), எம்.டி.தம்பிராஜா (சி.பி.எம். ஒழுங்கை, யாழ்ப்பாணம்), சி.செந்தாளன் (தெனியம்மன் கோயிலடி, வியாபாரிமூலை), நே.பிறேமதாஸ் (இராச வீதி, தோப்பு), ம.மரீனா மனோகரன் (2ம் குறுக்குத்தெரு), சு.பிரபாகரன் (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்)

## தினம் ஒரு பரிசு – 13


***உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் அதிக சதம் அடித்த வீரர் யார்?***

**விடை :- சச்சின் டெண்டுல்கர்**

**பரிசு பெறுபவர் :- த.சுஜேந்திரா (மணற்தறை வீதி, கந்தர்மடம்)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

கு.குபேரன் (சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்), செ.கஜானன் (விடத்தற்பளை, மிருசுவில்), த.சுஜேந்திரா (மணற்தறை வீதி, கந்தர்மடம்), றூ.கம்சிகாந் (பாரதி வீதி, நாயன்மார்கட்டு), க.கலையமுதன் (இராமநாதன் கமம், மருதநகர்), ஆர்.தர்மலிங்கம் (குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை), சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்), இ.குயின்சலா (செம்மணி வீதி, நாயன்மார்கட்டு), தே.ஜனந்தன் (சரசாலை தெற்கு, சாவ



கச்சேரி), பொ.கிருசாந்தன் (அம்பாள் குளம், கிளிநொச்சி), பா.சோஜிந்தன் (அளவெட்டி தெற்கு, அளவெட்டி), கே.அரசேஸ்வரன் (கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு), ப.உதயகுமார் (மஞ்சத்தடி கோயில், இணுவில்), அ.இக்நேசியஸ் (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), மு.முத்துக்குமாரு (உச்சியோடை, மானிப்பாய்), ப.பிரசாந் (சிவன் வீதி, ஆவரங்கால்), செ.கிரிசாந் (ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு), எஸ்.சாரங்கன் (கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்), அ.ஜெயந்தன் (டேவிட் வீதி, யாழ்ப்பாணம்), கே.பி.ஆர்.குலசிங்கம் (அரசடி வீதி, கந்தர்மடம்), சி.சுகன்யா (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), க.நிருபா (பெரியபாதி, வதிரி), க.தயேந்தினி (நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு), யோ.பிறேமிளா (ஊர்காவற்துறை), ஆர்.றாம்ஜி (கில்னர் லேன், யாழ்ப்பாணம்), அ.விமலராசா (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), இ.கோபிநாத் (புதுவளவு, கோப்பாய் தெற்கு), கு.கயல்விழி (அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி), இ.பிரதீபன் (புதுவளவு, கோப்பாய் தெற்கு), இ.பிரதாபன் (அம்மன் கோயில் வீதி, திருநெல்வேலி), சு.சுதாகரன் (தொட்டிலடி மத்தி),

## தினம் ஒரு பரிசு – 14

***உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் போட்டி ஒன்றில் அதிக ஓட்டங்களால் வெற்றிபெற்ற அணி எது?***

**விடை :- இந்தியா**

**பரிசு பெறுபவர் :- சி.செந்தாளன் (தெனியம்மன் கோவிலடி, வியாபாரி மூலை, பருத்தித்துறை)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***

சொ.தவராசா (ஐயனார் வீதி, பருத்தித்துறை), செ.அ.இராசநாதன் (நுகவில், கரவெட்டி தெற்கு), மு.புஸ்பகௌரி (கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி), க.கஜமுகன் (பளை நகர், பளை), ச.திருமகள் (புளியங்கண்டு வீதி, ஆனைக்கோட்டை), த.நீலலோகன் (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), தா.தவக்குமாரன் (பண்டாரிக்குளம் மேற்கு வீதி, நல்லூர்), செ.செந்தூரன் (பிரம்படி வீதி, கொக்குவில்), றூ.கம்சிகாந் (பாரதி வீதி, நாயன் மார்கட்டு), க.கலையமுதன் (இராமநாதன் கமம், மருதநகர்), ப.உதயகுமார் (மஞ்சத்தடி கோயில், இணுவில்), சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்), ஆர்.றாம்ஜி (கில்னர் லேன், யாழ்ப்பாணம்), சி.சுமிதா (பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்), சு.சோபியா (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்)

## தினம் ஒரு பரிசு – 15

***உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இம்முறை இலங்கை அணி ஏ பிரிவில் எத்தனையாவது அணியாக காலிறுதிக்கு முன்னேறும்?***

**விடை :- இரண்டாவது**

**பரிசு பெறுபவர் :- மு.சிவனு (மருத நகர் வைரவர், கிளிநொச்சி), ஞா.றகேல்சன் (130, மவுன்கார்மல் வீதி, யாழ்ப்பாணம்), சு.சோபியா (தொட்டிலடி மத்தி, சண்டிலிப்பாய்), கி.கபில் (பூலசிட்டி, அச்செழு, நீர்வேலி), சி.துஷன் (சங்கரத்தை வீதி, வட்டுக்கோட்டை)**

***பாராட்டுப்பெறுபவர்கள்......***


கி.சிவராசபவ்ன் (புலோலி வடமேற்கு, புலோலி), வி.கபில்ராஜ் (கந்தரோடை, சுன்னாகம்), றூ.கம்சிகாந் (பாரதி வீதி, நாயன்மார்கட்டு), க.கலையமுதன் (இராமநாதன் கமம், மருதநகர்), ஆர். தர்மலிங்கம் (குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை), சி.சசிந்தன் (கல்லாரை, மல்லாகம்).

*(தினமொரு கேள்வி போட்டிக்கான மிகுதி விபரங்கள் நாளை தொடரும்)*

# ஒரு கொடியில் பூத்த இருமலர்களின் நினைவலைகள்


30ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

28ஆம் ஆண்டு நினைவு



அன்னை மடியில்
04.10.1959
இறைவனின் அடியில்
20.03.2011

அன்னை மடியில்
06.03.1964
இறைவனின் அடியில்
15.04.1983



## தில்லையம்பலம் அரியரத்தினம் (டென்மார்க்)

## தில்லையம்பலம் நந்தகுமார்

20.03.2011 அன்று தில்லையம்பலம் அரியரத்தினம் அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு இல்லம் வந்து (வத்திராயன் தெற்கு) ஆறுதல் வார்த்தை கூறியோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் அளித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாளை (18.04.2011) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். மற்றும் எமது மனமறிந்து தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப்பெறாதவர்கள் மன்னித்து இவ்வறித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம். (4478)

குடும்பத்தினர்.
வத்திராயன் தெற்கு, தாழையடி.

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை வேதநாயகம்

(வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)

வடமராட்சி அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், இல 98, கச்சேரி நல்லூர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை வேதநாயகம் 14.04.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சிவகாமி தம்பதியரின் இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகமணி-பவளம் தம்பதியரின் மூத்த மருமகனும், பரிமளகாந்தியின் அன்புக் கணவரும், தபேந்திரன் (சமூக சேவைகள் உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்), இளங்கோவன் (சுவீடன்), திருமாறன் (சுவீடன்), வசந்தன் (சுவீடன்), காயத்திரி (சுவீடன்), அர்ச்சனா (A/L 2009 கலைப்பிரிவு மாணவி, யா/ திருக்குடும்ப கன்னியர் மடதேசிய பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், த.சற்குணேஸ்வரி (ஆசிரியை, யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), இ.சுஜீவா (சுவீடன்), தி.சுபாஜினி (சுவீடன்) ஆகியோரின் அருமை மாமனாரும், த.இலக்கியன், த.இந்துயன் இ.ஆரங்கன் (சுவீடன்), இ.அபினாஷ் (சுவீடன்) ஆகியோரின் நேசமிகு பேரனும், காலஞ்சென்ற வே.கோவிந்தசாமி மற்றும் வே.பாலசண்முகம், காலஞ்சென்ற வே.மகேசன் J.P (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் பிரியமிகு இளைய சகோதரரும், நா.தணிகாசலம், இ.கனகமலர், நா.அமிர்தநாயகம் (பிரான்ஸ்), நா.இராசநாயகம் (கணக்காளர், மாகாணத் திறைசேரி, வட மாகாணம்), நா.தர்மநாயகம் (லண்டன்), வி.யோகராணி (ஆசிரியை, யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்), நா.டெய்சிராணி (ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை), காலஞ்சென்ற நா.நவநாயகம் மற்றும் நா.பிரபாகரன் (உரிமையாளர் நாகமணி ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் ஆசை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.04.2011 நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொழும்புத்துறை, துண்டி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 98, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 8016

தகவல்:
குடும்பத்தினர். (4500)

# மருந்து சீட்டின்றி மருந்து வகைகளை விற்போருக்கு எதிராக கடும் தண்டனை

வைத்தியரொருவரின் மருத்துவச் சீட்டின்றி மருந்து வகைகளை விற்பனை செய்யும் மருந்தகங்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

இதற்காக வாசனைத்திரவியங்கள் மற்றும் ஔடதங்கள் தொடர்பான 1980 ஆம் ஆண்டு சட்டம் திருத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔடதங்கள் தொடர்பான அதிகார சபையின் இயக்குநர் டாக்டர் ஹேமத் பெரணகம தெரிவித்திருப்பதாவது,

வைத்தியரொருவரின் மருத்துவச் சீட்டின்றி மருந்துகளை விற்பனை செய்யும் மருந்தக உரிமையாளர்களுக்கு ரூபா 5 இலட்சம் தண்டப்பணம் விதிப்பதற்கும் ஒரு வருடம் சிறைத்தண்டனை விதிக்கும் விதத்திலும் இச்சட்டம் திருத்தப்படவுள்ளது.

தற்போதுள்ள சட்டத்தின் பிரகாரம் இவ்வாறான குற்றச் செயலில் ஈடுபடுவோருக்கு ரூபா 50 ஆயிரம் தண்டப்பணமும் 3 மாத சிறைத்தண்டனை மட்டுமே வழங்கப்படுகிறது. இது போதுமானதல்ல.

அனுமதிப்பத்திரம் இல்லாது மருந்தகங்களை நடத்துதல், மருத்துவச் சீட்டின்றி மருந்து வகைகளை விற்பனை செய்வது மற்றும் பதிவு செய்யாது மருந்து வகைகளை விற்பனை செய்வது போன்ற சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கு எதிராக கடும் தண்டனைகள் விதிக்கும் விதத்திலான திருத்தங்கள் சட்டமூலத்தில் உள்ளடக்கப்படவுள்ளன.

சட்டவிரோதமான முறையில் இயங்கி வரும் மருந்தகங்களுக்கு நீதிமன்ற அனுமதியின்றி சீல் வைப்பதற்கான திருத்தங்களும் கொண்டுவரப்படவுள்ளன.

இத்திருத்தச்சட்ட மூலம் இன்னும் இரண்டொரு மாதங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ஶ்ரீ-2)

# தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரத்துக்கு சுற்றுலா படகுசேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பொருட்டு தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரம் வரை சுற்றுலா படகு சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த படகு சேவையின் ஆரம்ப நிகழ்வில் வடமத்திய மாகாண கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் ரொஹான் அமரசிங்க, மன்னார் மாவட்ட செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தலை மன்னாரை அண்மித்த கடற்பிராந்தியத்தில் இயற்கை அழகு மற்றும் அங்கு அமைந்துள்ள மணல் திட்டுக்களை பார்வையிடும் வாய்ப்பு சுற்றுலாப் பயணிகளுக்கு இதனூடாக கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலை மன்னார் கடற்படை முகாமையொட்டிய பழைய துறைமுகத்தில் இந்த சேவைகள் நாளாந்தம் காலை 8 மணி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

உள்நாட்டு சுற்றுலா பயணிகளுக்கு 500 ரூபா அனுமதிக் கட்டணமும் வெளிநாட்டு பயணிகளுக்கு ஆயிரம் ரூபா கட்டணமும் அறவிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஶ்ரீநாராயணா சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், மறுமலர்ச்சி விளையாட்டு கழகம், பாலர் பாடசாலை ஆகியவை இணைந்து நடாத்தும் 59 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் இல்ல மெய்வல்லுநர் போட்டியும் பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளன.

தொடர்ந்து 20 ஆம் திகதி புதன்கிழமை வரை தினமும் பிற்பகல் 4 மணிக்கு ஶ்ரீ நாராயணா சனசமூக நிலையத் தலைவர் தெ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்றைய நாள் நிகழ்வில் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் , கஜமுகன் ஹாட்வெயர் உரிமையாளர், ஈ.எஸ்.பி. நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கை மின்சார சபையின் வடமாகாண உதவிக் கணக்காளர் க.சுரேஸ்நேசன், ஶ்ரீநாராயணா சனசமூக நிலைய காப்பாளர் ச.தியாகராசா, முன்னாள் தலைவர் வே.வ. கோபாலசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஶ்ரீ-2)

# இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது

## அமெ.காங்கிரஸ் உறுப்பினர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பயங்கரவாதம் முறியடிக்கப்பட்ட பின்னர் நாட்டைக்கட்டியெழுப்புவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் பாராட்டத்தக்கது என அமரிக்க ஐக்கிய இராச்சியக் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

றீபப்ளிக்கன் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர் யோவில்சன் அந்தநாட்டு காங்கிரஸ் சபையின் முன்னிலையில் தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

புத்தாண்டில் இலங்கை மக்கள் புதிய எதிர்பார்ப்புக்களையும் தெளிவையும் பெற்றுக்கொள்வார்கள் என தாம் நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ் சபை உறுப்பினரின் கருத்தை மேற்கோள்காட்டி அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பயங்கரவாதம் முறியடிக்கப்பட்ட பின்னர் இரண்டாவது சித்திரைப்புத்தாண்டை இலங்கை மக்கள் கொண்டாடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை, அமெரிக்க நாடுகளுக்கிடையிலான அரசியல், பொருளாதாரம் மற்றும் தனிநபர் உறவுகளை எதிர்காலத்தில் மேலும் அதிகரித்துக்கொள்ள முடியுமென யோவில்சன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஶ்ரீ-3)


காலத்தின் தேவையில்
மாபெரும் கண்காட்சி
மிதிவெடிச் செயற்பாட்டின் விழிப்புணர்விற்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு நடாத்தப்படும்
கண்காட்சி நிகழ்வும் கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளும்
இடம் : யாழ். இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்.
காலம்: 20.04.2011 புதன்கிழமை, 21.04.2011 வியாழக்கிழமை
நேரம் : காலை மு.ப 10.00 மணி தொடக்கம்- பி.ப 5.00 மணிவரை
நிகழ்ச்சிகள்
- பிராந்திய மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகச் செயற்பாடுகளும் விளக்கங்களும்
- இராணுவ பொறியியல் படைப்பிரிவு , Halo Trust, Danish Deming Group ஆகியோரின் உலகத் தரம் வாய்ந்த கண்ணிவெடி அகற்றுதலுக்கான செயன்முறை விளக்கங்களும், பயன்படுத்தப்படும் எந்திரப் பொறிகளின் வகைகளும் காண்பிக்கப்படவுள்ளன.
- இராணுவப் பொறியியற் பிரிவினரின் பல்வேறு மிதிவெடிகள், வெடிபொருட்களின் வகைகளை மக்கள் விழிப்புணர்வுக்காகக் காட்சிப்படுத்த உள்ளனர்.
- மிதிவெடி விழிப்புணர்வு நிறுவனங்களின் பல்வேறு அரிய காட்சிப்படுத்தல்களும் இடம்பெற உள்ளன.
கண்ணிவெடிகள்/ வெடிபொருட்களின் அரக்கப்பிடியில் இருந்து மக்கள் இன்னும் மீளவில்லை. இன்றும் விபத்துக்கள் தொடர்கின்றன...
அனைவரையும் அணிதிரண்டு வந்து கண்காட்சியைக் கண்டு பயன்பெற அன்புடன் அழைக்கிறோம்.
மிதிவெடி/வெடி பொருட்களின் ஆபத்தில் இருந்து எம்மையும் மற்றவரையும் பாதுகாப்போம்.
அனுமதி இலவசம்
விழா ஏற்பாட்டாளர்கள்: பிராந்திய மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், வடக்கு.
(சி-2983)

# கோப்பாய் கோட்டமட்ட விளையாட்டுப் போட்டி முடிவுகள்

கோப்பாய் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி முடிபுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விபரம் வருமாறு,

17 வயது ஆண்கள்

*ஈட்டி எறிதல்*

ஞா. றெனோஜன் (யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி) , வி. பிரதீபன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), சு.மகிதனன் ( யா/அச்சுவேலி மத்திய கல்லூரி).

*4 × 100 அஞ்சல்*

யா/அத்தியார் இந்துக் கல்லூரி, யா/ ஆவரங்கால் நடராஜராமலிங்கம் வித்தி, யா/ கோப்பாய் மகா வித்தி.

*4 × 400 அஞ்சல்*

யா/அத்தியார் இந்துக் கல்லூரி, ஆவரங்கால் நடராஜராமலிங்கம் வித்தி, யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி.

19 வயது ஆண்கள்

100 மீற்றர் ஓட்டம்

தி.ஜெகன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), அ.கேதீஸ்வரன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), பு.சுஜீவன் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி).

200 மீற்றர் ஓட்டம்

தி.ஜெகன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), அ.கேதீஸ்வரன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), தி.லவராஜ் ( யா/அச்சுவேலி மத்திய கல்லூரி).

400 மீற்றர் ஓட்டம்

தி.ஜெகன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), ஜெ.வினோஜன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), கு.குருசாந் ( யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

800 மீற்றர் ஓட்டம்

பா.ஜசீகன் (யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி), வே.நிரோஜன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), கி.தனுசன் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி).

1500 மீற்றர் ஓட்டம்

பா.ஜசீகன் (யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி),வே.நிரோஜன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி),த.கயூரன் ( யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

நீளம் பாய்தல்

ச.டிலக்சன் (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), ஜெ.வினோஜன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), இ.நகுலேஸ்வரன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி).

உயரம் பாய்தல்

இ.இராஜதீசன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), அ.கேதீஸ்வரன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), கு.குருசாந் (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

முப்பாய்ச்சல்

பு.சுஜீவன் ( யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி), ஜெ.வினோஜன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), இ.இராஜதீசன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி).

5000 மீற்றர் ஓட்டம்

பா.ஜசீகன் (யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி), இ.தர்ஷன்( யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தி), வே.நிரோஜன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி).

குண்டு எறிதல்

செ.கிரிதரன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), ம.வாகீசன் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி), தே.ஜான்சன் (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி).

தட்டு எறிதல்

தே.ஜான்சன் (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), யோ.பிரதாபன் (யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி), ச.டிலக்சன் ( யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி).

ஈட்டி எறிதல்

செ.கிரிதரன் (யா/அத்தியார் இந்துக்கல்லூரி), ர.துவாரகன் ( யா/அச்சுவேலி மத்திய கல்லூரி), ம.வாகீசன் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி).

*4 × 100 அஞ்சல்*

யா/அத்தியார் இந்துக் கல்லூரி, யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி , யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

*4 × 400 அஞ்சல்*

யா/அத்தியார் இந்துக் கல்லூரி , யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி , யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

21 வயது ஆண்கள்

100 மீற்றர் ஓட்டம்

தே.சஜீவன் ( யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), த.பபிதாஸ் (யா/அத்தியார் இந்துக்கல்லூரி), செ.அயனன் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி).

200 மீற்றர் ஓட்டம்

தே.சஜீவன் ( யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), த.பபிதாஸ் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி),இ.இராஜபிரதாப் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி.

400 மீற்றர் ஓட்டம்

தே.சஜீவன் ( யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), த.பபிதாஸ் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி, இ.சஞ்சீவன் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி).

800 மீற்றர் ஓட்டம்

பே.தயாகரன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி,தி.பார்த்தீபன் (யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி) , வெ.துவாரகன் (யா/அத்தியார் இந்துக்கல்லூரி).

1500 மீற்றர் ஓட்டம்

பே.தயாகரன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி,தி.பார்த்தீபன் (யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி) , வெ.துவாரகன் (யா/அத்தியார் இந்துக்கல்லூரி).

5000 மீற்றர் ஓட்டம்

பே.தயாகரன் (யா/அத்தியார் இந்துக்கல்லூரி, கி.தர்மிலன் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி), ப.பஞ்சசீலன் (யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி).

நீளம் பாய்தல்

மோ.கஜன்ராஜ் (யா/இடைக்காடு மகா வித்தி, இ.இராஜபிரதாப் (யா/அத்தியார் இந்துக்கல்லூரி,கு.தர்மிதன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி.

உயரம் பாய்தல்

அ.வெளிகஜிஸ்ரன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி,இ.சஞ்சீவன் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி), பா.நிரோஜன் ( யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி).

முப்பாய்ச்சல்

மோ.கஜன்ராஜ் (யா/இடைக்காடு மகா வித்தி), கோபிதாஸ் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி), பு.மதுளதாஸ் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி.

குண்டு எறிதல்

அ.பிரசாத் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி),தி.மதிவர்மன் (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), வி.நிரூபன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி.

தட்டு எறிதல்

அ.பிரசாத் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி), சி.சுசீலன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி, வி.நிரூபன் (யா/அத்தியார் இந்துக் கல்லூரி.

ஈட்டி எறிதல்

.அ.பிரசாத் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி), தி.மதிவர்மன் (யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி),யோ.யகேன் (யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி).

*4 × 100 அஞ்சல்*

யா/அத்தியார் இந்துக் கல்லூரி, யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யா/ஸ்ரீ சோமாஸ் கந்த கல்லூரி.

*4 × 400 அஞ்சல்*

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யா/ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, யா/அத்தியார் இந்துக் கல்லூரி . (முற்றும்)

# 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புராதன காலத்துக்குரிய மயான எச்சங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மூவாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட புராதன காலத்துக்குரிய மயான எச்சங்கள் ஹல்துமுல்ல வேவலிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

களனி பல்கலைக்கழகத்தின் புவிச்சரிதவியல் ஆய்வுப் பிரிவின் பேராசிரியர் ராஜ் சோமதேவ உள்ளிட்ட தொல்பொருள் ஆராய்ச்சியாளர் குழுவினரால் இது தொடர்பான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மத்திய மலை நாட்டின் தென் பள்ளத்தாக்கான பிரதேசத்தில் பரிணாம வளர்ச்சியடைந்து வந்த ஒரு கலாசார மரபு தொடர்பான தகவல்களை இந்த எச்சங்கள் மூலம் கண்டுபிடிக்க முடியுமென பேராசிரியர் ராஜ் சோமதேவ நம்பிக்கை வெளியிட்டார்.

குறித்த பிரதேசத்தில் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட மயானங்களில் சேற்றினாலேயே நினைவு தூபிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதேவேளை புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மயானத்தில் நினைவுத் தூபிகள் வட்ட வடிவில் கற்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நினைவுத் தூபிகள் கடும் பிரயத்தனம் மேற்கொண்டு கற்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஹல்துல்ல தொல்பொருட்கள் அந்த பகுதியில் வியாபித்துக் காணப்படுவதாகவும் அவற்றில் பெரும்பாலானவை புதையல் தோண்டுகின்றவர்களால் சேதப்படுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள மயான எச்சங்களில் இவை மிகவும் புராதன காலத்தைச் சேர்ந்தவை என தற்போது தற்காலிகமாக உறுதி செய்ய முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற மூன்று மயான எச்சங்கள் வேஎலிய பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புராதன காலத்துக்குரிய இந்த மயான எச்சங்களைத் தொடர்ந்து ஆய்வுக்குட்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# தங்கம் கடத்த முயன்ற இந்தியர் கைது

ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து கடத்திச் செல்ல முயன்ற இந்தியரொருவர் விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை பிரதேசத்தின் மருத்துவமனையொன்றில் மருத்துவத் தொழில் நுட்பவியலாளராகக் கடமையாற்றும் 28 வயதான இந்தியர் ஒருவரே அவ்வாறு சட்டவிரோதமாகத் தங்கத்தை கடத்திச் செல்ல முயன்ற போது கைது செய்யப்பட்டுள்ளார்.

தங்கசங்கிலி, தங்கவளையல் என்பன மட்டுமின்றி தங்க பிஸ்கட்டுக்களையும் அவர் சட்டவிரோதமாகக் கடத்திச் செல்ல முற்பட்டிருந்தார்.

அவற்றின் எடை நூற்றி ஐம்பது கிராம் எனவும் சந்தைப் பெறுமதி ஏழு இலட்சத்து பத்தாயிரம் அளவில் இருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட தங்கம் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதுடன் மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. (ஸ்ரீ-2)

# புத்தாண்டு கால விபத்துகள் மற்றும் வன்முறைகளில் 18 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டு காலப் பகுதியில் இடம் பெற்ற வெவ்வேறு விபத்துக்களில் 18 பேர் உயிரிழந்துள்ளதுடன் 600 க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாக பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இவ்விபத்துக்களின் போது உயிரிழந்திருப்பவர்களில் நால்வர் 12 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் என்றும் ஐவர் இளைஞர்கள் என்றும் ஏனையர்கள் நடுத்தர மற்றும் முதுமை வயதை உடையவர்கள் என்றும் பொலிஸார் கூறினர்.

வாகன விபத்துக்கள்-கத்திக்குத்து-கங்கைகளில் நீராடிய போது ஏற்பட்ட விபத்து மற்றும் உமா ஓயாவின் நீர்மட்டம் திடீரென உயர்ந்ததால் விபத்து என்பன காரணமாகவே இந்த உயிரிழப்புகள் இடம் பெற்றிருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

புத்தாண்டு காலத்தில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் ஒன்பது பேரும் நண்பர்கள் உறவினர்களோடு கங்கைகளில் நீராடிய ஐவரும்- உமா ஓயா நீர் மட்டம் திடீரென உயர்ந்ததால் காட்டுக்குச் சென்று விறகு சேகரித்துக் கொண்டு வீடு திரும்பிய மூன்று சிறுமிகளுமாக 18 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் அவர்கள் கூறினர். (ஸ்ரீ-2)

# பான் கீ மூனின் அறிக்கை வேடிக்கையானதாகும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சர்வதேச நாடுகளின் போர்க் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யானவை, அமெரிக்கா மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகளுக்கு எதிராக இவ்வாரத்தில் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

நாட்டின் சுயாதீன தன்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு சர்வதேச நாடும் ஊடுருவ இடமளிக்க முடியாது.

பான் கீ மூனின் அறிக்கை வேடிக்கையானதும் கோமாளித்தனத்தின் உச்சக்கட்டமாகும் என்றும் அந்த இயக்கம் குறிப்பிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# கோடை காலமும், பழங்களின் மருத்துவ பண்பும்

1

பருவ காலங்களுக்கு ஏற்ப என்னென்ன உணவுகளை உட்கொள்ள வேண்டும் என்பது பற்றி மூலிகை மருத்துவத்தில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.




முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனில், முதுவேனில், கார்காலம், கூதிர்காலம் என ஆறு காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அப்பருவகாலங்களில் சூழல், உடல் நிலைகளுக்கு ஏற்ப உணவு முறைகளை உட்கொள்ள வேண்டும். உடலின் தேவை, அக்கினிமாற்றம் என்பவற்றிக்கேற்ப அவ்வப் பருவகாலங்களில் இவ்வுணவுகள் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இதன் மூலம் உடம்பால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பக்க விளைவுகளற்ற உடல் நிலையைப் பேண முடியும்.

இவ்வறிவின்மையால் உடல் எதிர்ப்பு சக்தி குறைவு, பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன.

அந்த வகையில் வெப்ப காலத்தில் அடியெடுத்து வைக்கின்றோம்.

எனவே, பித்த சம்பந்தமான நோய்கள் அதிகளவில் ஏற்படலாம். ஆகவே, பித்தத்தை குறைக்கக்கூடிய, குளிர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய கீரைகள், பழங்கள் என்பவற்றை அதிகளவில் உண்ண வேண்டும். இவை அதிகளவிலான போசணைப் பெறுமானங்களை உள்ளடக்கியது. அதிகளவிலான பழங்கள் கனியுப்புகள், விற்றமின்களை அதிகளவில் கொண்டுள்ளது.

ஆரோக்கியம், நோயெதிர்ப்பு சக்தி, அழகு என்பவற்றினை பெற சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அன்றாட உணவில் சேர்க்க வேண்டும். வயது, பால், உடல்நிலை என்பவற்றிற்கேற்ப அவற்றின் அளவுகள் மாறுபடும்.

எவ்வாறான பழங்களை எப்படி உண்பதுபற்றி நாம் கவனிக்க வேண்டும். எமது மருத்துவத்தில் சுவைக்கு முக்கியத்துவம் தராமல் சத்து மிகுந்த உணவிற்கே முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது.

வாய்ச்சுவையை கட்டுப்படுத்தும் பழக்கத்தை நாம் ஏற்ப டுத்த வேண்டும். அளவுக்கு மீறிய உணவுகளை உள்ளெடுப்பதே நோய்க்குக் காரணமாகும் எனும் கூற்றில் ஐயமில்லை.

"பிணி எனப்ப டுவது சாரின் பிறிது ஆய்
இயற்கையின் திரிந்து, உடம்பு இடும்பை புரிதல்"

அதாவது இயற்கையின் படைப்பே உயிரும் உடலும் இயற்கைக்கு ஒவ்வாத உணவுப் பழக்கங்கள், தீய நடத்தைகள் காரணமாக உடலை நோய் பற்றிக் கொள்கிறது.

### வெள்ளரி

❁ கோடை காலத்தில் சாகுபடியாகும் பழங்களில் வெள்ளரியும் ஒன்றாகும்.

❁ இதன் பிஞ்சு சுவையாக இருக்கும்

❁ கோடை காலத்தில் வெயிலின் கொடுமை மிகுதியால் தாகம், களைப்பு போன்றன ஏற்படுகின்றன. இதற்கு நன்றாக பழுத்திருக்கும் வெள்ளரிப்பழத்தின் சதைப் பகுதியினை (Fruit bulp) விதையை நீக்கி நசுக்கி சாறெடுத்து அத்துடன் சீனி /மோர் கலந்து கொடுக்க தாகம் தணிந்து புத்துணர்ச்சியை ஏற்படுத்தும்.

❁ அல்லது வெள்ளரிப்பழத்தை தோல் மற்றும் விதையை நீக்கி சர்க்கரை கலந்து அப்படியே சாப்பிடலாம்.

❁ இப்பழமானது நன்றாக பழுத்தவுடன் தானாகவே பிளந்து கொள்ளும்.

❁ உடல் உஷ்ணத்தைத் தணிக்கும் ஒரு சிறந்த பழமாகும்.

**வெள்ளரிப்பழம் (100கிராமில்) உள்ள சத்துக்கள்**

| | |
|---|---|
| புரதம் | 0.4 g |
| கொழுப்பு | 0.1 g |
| காபோவைதரேற்று | 2.5 g |
| கல்சியம் | 10 mg |
| பொஸ்பரஸ் | 25 mg |
| இரும்பு | 1.5 mg |
| தயமின் | 0.03 mg |
| நியாசின் | 0.2 mg |
| நார்ச்சத்து | 0.4 g |

### வில்வம் பழம்

❁ வில்வம் பழம் கடைகளில் விற்கப்படுவதில்லை. தேவையானால் வில்வமரம் உள்ள இடத்திற்கு சென்றே பெறமுடியும்.

❁ ஆனால் இவ்வில்வம் பழமானது கஷரோகத்திற்கும் வயிற்றுப் புண்ணிற்கும் சிறந்ததோர் பழமாகும்.

❁ வில்வம் பழத்தின் சதைப்பாகத்தை தேவையான அளவு சீனி/சர்க்க்ரை சேர்த்து பிசைந்து காலையில் சாப்பிட வயிற்றுப் புண் நீங்கி உடலுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

❁ இதிலுள்ள விதையை நீக்கி இதன் சதையை பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட உடலுக்கு குளர்ச்சியையும் தந்து வலுவையும் கொடுக்கும்.

**வில்வம்பழம் (100கிராமில்) உள்ள சத்துக்கள்**

| | |
|---|---|
| புரதம் | 18g |
| கொழுப்பு | 0.3 g |
| காபோவைதரேற்று | 31.8 g |
| கல்சியம் | 85 mg |




| | |
|---|---|
| பொஸ்பரஸ் | 50 mg |
| இரும்பு | 0.6 mg |
| தயமின் | 0.13mg |
| நியாசின் | 1.1 mg |

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

| | |
|---|---|
| றைபோபிளேவின் | 0.13mg |
| விற்றமின் சி | 8 mg |
| நார்ச்சத்து | 2.9 g |

(தொடரும்)

# போதுமான சாட்சியங்கள் இல்லாவிட்டால் எவரையும் நீண்டகாலம் தடுத்துவைக்கமுடியாது

## பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தெரிவிப்பு



( கொழும்பு )

**இலங்கைச் சிறைகளில் விசாரணைகளின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் குறித்து பிரதம நீதியரசர் அசோக டிசில்வா கருத்து வெளியிட்டுள்ளார்.**

போதுமான சாட்சியங்கள் இல்லா விட்டால் எவரையும் நீண்ட காலம் தடுத்து வைத் திருக்க முடியாது எனவும் பிணையில்லாது அவர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்றுதான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அடுத்த மாதப் பகுதியில் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்கின்ற பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் பல ஆண்டுகளாகவே பெரும் பிரச்சினைகவே இருந்து வருகின்றது.

பலர் பல ஆண்டு காலமாக எவ்வித வழக்கு விசாரணைகளும் இன்றி சிறைகளில் வாடுவதாக சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்ந்தும் சுட்டிக் காட்டி வருகின்றனர்.

அரசியல் கைதிகளை விடுவிக்க கோரி உறவினர்கள் மன்றாடி வருகின்றனர். சிறைக் கைதிகளும் தம்மீது வழக்குத் தொடர்ந்து விசாரணை நடத்துங்கள் அல்லது குற்றச் சாட்டுக்கள் இல்லாவிட்டால் விடுதலை செய்யுங்கள் என்று பல்வேறு வகையான போராட்டங்களும் நடத்தியுள்ளனர்.

அவர்களின் குடும்ப உறவினர்களும் இவர்களின் விடுதலைக்கு ஆவன செய்யப்பட வேண்டுமென அதிகாரிகளிடம் மன்றாடி வருகின்றனர்.

வழக்கு விசாரணைகள் இன்றி நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பற்றி தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டதாகவும் அசோக டி சில்வா தெரிவித்தார்.

பயங்கரவாதம், யுத்தத்துடன் தொடர்புடையவர்கள் தவிர பலர் கொலைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டவர்களாக இருப்பதாகவும் எவ்வாறெனினும் குறித்த குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் ஆதாரங்கள் இல்லையென்பதற்காக அவர்களை பல காலம் சிறையில் அடைத்து வைக்காது ஆதாரங்கள் கிடைத்த பின் விசாரணை நடத்தி பின்னர் கைது செய்யலாம் எனவும் தான் பொலிஸாருக்கு கூறியுள்ளதாகவும் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# லோட்டஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கிரிக்கெட் போட்டி

ஆறுகால்மடம் லோட்டஸ் விளையாட்டுக் கழகம் வருடாந்தம் நடத்தும் ஏ2 கே விளையாட்டுக் கழகத்திற்கும் லோட்டஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் நான்காவது வருட போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை லோட்டஸ் விளையாட்டுக் கழ்க மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அமரர் மதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக நடைபெறவுள்ள மேற்படி போட்டி இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. கிரிக்கெட் போட்டியுடன் சிறுவர், பெண்களுக்கான போட்டிகளும் நடைபெறவுள்ளன. அத்துடன் நல்லூர் பிரதேச செயலக கழகங்களுக்கிடையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் வெற்றிபெற்ற கழக வீரர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஸ்ரீ ஞானபண்டி வித்தியாலய அதிபர் க.கந்தவனச்செல்வனும், கௌரவ விருந்தினராக ஆசிரியர் ரா.சந்திரதாஸீம் கலந்து கொள்ளவுள்ளனர். கடந்த முறை நடைபெற்ற இரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டத்தில் ஏ2 கே அணி வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# உணவு விஷமடைந்ததால் 54 பேர் வைத்தியசாலையில் அனுமதி

வட்டவளை லேனான் பிரதேசத்தில் உணவு விஷமடைந்ததால் 54 பேர் வரை நேற்று முன்தினம் வட்டவளை மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ரத உற்சவத்தையும் அடுத்து இடம் பெற்ற அன்னதான நிகழ்வின் போதே இந்த நிலையேற்ப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இவர்கள் வாந்திமற்றும்வயிற்றோட்டம்போன்ற நோய் அறிகுறிகளுடனே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2010

## 8 வீத பொருளாதார வளர்ச்சி

## தனிநபர் வருமானம் 2399 டொலர்

## வேலையின்மை -4.9 % வீழ்ச்சி



ஆண்டறிக்கைப்படி, பொருளாதாரம் 8 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது. விவசாயத் துறை 7 சதவீதமாகவும், கைத்தொழில் துறை 8.4 சதவீதமாகவும், சேவைகள் துறை 8 சதவீதமாகவும் வளர்ச்சி அடைந்துள்ளது.

இலங்கை 2010ஆம் ஆண்டு 8 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இவ்வாறான பொருளாதார வளர்ச்சியை இலங்கை 34 வருடங்களின் பின்னர் அடைந்திருப்பதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டார்.

இந்த நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் இரண்டாவது தடவையாக பெற்றிருக்கும் உயர் பொருளாதார வளர்ச்சி இதுவென்றும் குறிப்பிட்டார்.

இலங்கை மத்திய வங்கியின் 61ஆவது ஆண்டறிக்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் கடந்த 11ஆம் திகதி வெளியிடப்பட்டது. இவ்வைபவத்தின் போதே மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மேற்படி தகவல்களைத் தெரிவித்தார்.

2010ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைப்படி,

இலங்கையில் 1977ஆம் ஆண்டில்தான் முதன் முதலாகதிறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இக்கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் உச்ச பொருளாதார வளர்ச்சியை கடந்த வருடமே இந்த நாடு அடைந்துள்ளது என மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி பிரிவின் பதில் பணிப்பாளர் சுவர்ணா குணரட்ண குறிப்பிட்டார்.

மேலும் 2010-ம் ஆண்டிற்கான மத்திய வங்கி அறிக்கைப்படி 2009ஆம் ஆண்டில் 5.8 சதவீதமாகக் காணப்பட்ட வேலையின்மை 2010ஆம் அண்டு முடிபுறும்போது 4.9 சதவீதம் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது.

யுத்தம் முடிபடைந்ததன் பின்னர் முதலீடுகள் அதிகரித்ததோடு புதிய வேலைவாய்ப்புகள் வடக்கு கிழக்கு உட்பட நாடெங்கிலும் உருவாகின. இதன்பயனாகவே வேலையின்மை வீழ்ச்சி அடைந்ததாகவும் அவர் கூறினார்.

இந்த அறிக்கையின்படி, 2009ஆம் ஆண்டில் 2057 அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட தனிநபர் தலா வருமானம் 2010ஆம் ஆண்டு முடிபுறும்போது 2399 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ளது.

இலங்கையரின் தலா வருமானத்தை 2016ஆம் ஆண்டாகும் போது 4000 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்படி தலா வருமானம் கட்டம் கட்டமாக அதிகரித்து வருகிறது என்றும் அவர் கூறினார்.

2010ஆம் ஆண்டில் 6 இலட்சத்து 54 ஆயிரம் உல்லாசப் பயணிகள் இங்கு வருகை தந்துள்ளனர். இது உல்லாச பயணத் துறையில் 46 சதவீத வளர்ச்சி.

அதேநேரம் பணவீக்கம் 5.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மத்திய வங்கி அறிக்கைப்படி, 2009ஆம் ஆண்டில் 9.9 சதவீதமாகக் காணப்பட்ட வரவு - செலவு திட்டப் பற்றாக்குறை, 2010 ஆம் ஆண்டு முடிபுறும் போது 7.9 சதவீதம் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது.

கட்டிட நிர்மாணத் துறையில் 9.3 சதவீத வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை 2009ஆம் ஆண்டு 64.4 சதவீதமாக காணப்பட்ட தனியார் முதலீடு, 2010ஆம் ஆண்டு முடிபுறும் போது 65.8 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு நாணய கையிருப்பு 2010ஆம் ஆண்டு முடிபுறும் போது 6.6 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இது 2011 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியாகும்போது 7.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ளது. இது இலங்கை வரலாற்றில் அதி கூடிய கையிருப்பாகும் என்றார் பதில் பணிப்பாளர்.

2009ஆம் ஆண்டில் 24.9 சதவீதமாக காணப்பட்ட அரச செலவினம், 2010ஆம் ஆண்டு முடிபுறும் போது 22.9 சதவீதம் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது.

2009ஆம் ஆண்டில் 6.6 சதவீதமாகக் காணப்பட்ட அரச முதலீடு, 2010ஆம் ஆண்டில் 6.2 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

2010ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம்17.3 சதவீதமாக அதிகரித்தது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 109.51 | 111.25 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 177.79 | 182.05 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 156.78 | 161.19 |
| சுவிஸ் பிராங் | 119.73 | 124.01 |
| கனேடிய டொலர் | 113.16 | 116.95 |
| அவுஸ்திரேலிய டொலர் | 113.44 | 117.27 |
| சிங்கப்பூர் டொலர் | 86.35 | 88.91 |
| ஜப்பான் யென் | 1.29 | 1.33 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.49 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.03 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

## எக்ஸ்போலங்கா ஹோல்டிங்

## ஐ.பி.ஓ. மே 12 ஆரம்பம்

எக்ஸ்போலங்கா ஹோல்டிங் (Expolanka Holdings) நிறுவனம் ரூ.2.4 பில்லியன் ஆரம்ப பொது வழங்கல் தொடர்பாக அறிவித்துள்ளது.

172 மில்லியன் வாக்குரிமை பங்குகளை தலா ரூ.14 வீதம் எக்ஸ்போலங்கா ஹோல்டிங் வழங்குகிறது. இதன் மூலம் நிறுவனம் ரூ.2.4 பில்லியன் மூலதனத்தை அதிகரித்துக் கொள்ள திட்டமிட்டுள்ளது.

உத்தியோகபூர்வ பங்கு வழங்கல் (IPO) 2011 மே மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை சகல பங்குத்தரகு நிறுவனங்களிலும் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ளலாம்.

10இற்கும் மேற்பட்ட நாடுகளில் தொழில் வலையமைப்பை கொண்டுள்ள மேற்படி நிறுவனம் பிரயாணம், சர்வதேச வர்த்தகம், உற்பத்தி மற்றும் முதலீட்டு ஆகிய ஆகிய துறைகளில் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாளை - பிரீ லங்கா

தலா ரூ.5 வீதம்300 மில்லியன் பங்குகளை வழங்கிய பிறீ லங்கா கப்பிற்றல் ஹோல்டிங் லிமிட்டட்டின் பங்கு வர்த்தகம் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் நாளை ஆரம்பமாகிறது. மேற்படி நிறுவன ஐ.பி.ஓவுக்கு 46 மடங்கு மிகைக் கேள்வி காணப்பட்டமை தெரிந்ததே.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7413.87 | 7574.85 ⇧ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7021.22 | 7064.25 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 6,063.99

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** கெஸ்னர் (257.00), மோரிஷன்ஸ் (3466. 00), கூஜே(149.20), யூனியன் அசுரன்ஸ் (255.60), சிலோன் பிரேவரி (562.40).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** கோல்ட் ஸ்ரோர்ஸ் (750.10), கொழும்பு பார்மசி (3125.00), கொஸ்லீனியன் பூட் (411.60), ஹெமனிக் (130.10), பின்லேஸ் கொழும்பு(300.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## இந்தியாவின் தங்க

## நுகர்வு அதிகரிப்பு

இந்தியாவின் தங்க நுகர்வு அடுத்த 10 ஆண்டுகளில் ஆயிரத்து 200 தொன்னாக உயரும் என்று உலக தங்க கவுன்சில்(டபிள்யூ.யூ.சி) மதிப்பிட்டுள்ளது.

இந்திய மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்துள்ளதால், பெரும்பாலான மக்கள் தங்கத்தில் முதலீடு செய்கின்றனர். இதனால் தங்கத்தின் தேவை அதிகரிக்கும் என்று கவுன்சிலின் நிர்வாக இயக்குநர் அஜய் மித்ரா தெரிவித்துள்ளார்.

தங்கத்தின் விலை கடந்த 10 ஆண்டுகளில் 400 சதவீதமளவிற்கு உயர்ந்த போதிலும் இந்தியாவில் தங்கத்தின் நுகர்வு 25 சதவீதம் அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

2010-ம் ஆண்டில் மட்டும் சர்வதேச அளவில் விற்பனையான தங்கத்தில் 32 சதவீதம் இந்தியர்களால் வாங்கப்பட்டுள்ளது.

அடுத்த 10 ஆண்டுகளில் ஆண்டுக்கு 3 சதவீத அளவுக்கு இந்தியாவில் தங்கம் வாங்குவோர் விகிதம் உயரும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## புதிய பொலிவுடன் நனோ கார்

## உற்பத்தியை அதிகரிக்கிறது டாடா



உலகில் மிகக்குறைந்த விலைக் காரான டாடா நிறுவனத்தின் நானோ கார் மீண்டும் உச்சபட்ச வேகத்தில் பயணிக்கத் தொடங்கியுள்ளதையடுத்து, அதன் உற்பத்தியை 2 மடங்காக அதிகரிக்க டாடா மோர்டார்ஸ் நிறுவனம் முடிபெடுத்துள்ளது.

இது தொடர்பாக டாடா மோர்டார்ஸ் நிறுவனத்தின் உயர் அதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நானோ கார் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அதன்பின்னர் பல்வேறு சோதனைகளை தங்கள் நிறுவனம் சந்தித்தது நாடறிந்ததே. தற்போது அச்சோதனைகளை கடந்து புதிய பொலிவுடன் பல்வேறு வசதிகளைக் கொண்டதாக மிக விரைவில் நானோ கார் வர இருப்பதாக டாடா மோர்டார்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று இந்நிறுவனத்தின் நீண்ட கால எதிர்பார்ப்பான குஜராத் உற்பத்தி ஆலையும் இன்னும் சில மாதங்களில் இயங்கத் தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நானோ கார் வாடிக்கையாளர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாகவும், கடந்த மாதம் 8, 700 கார்கள் விற்பனை செய்யப்பட்டதாகவும், மிக விரைவில் குஜராத் ஆலை செயல்படத் தொடங்கியபின் மாதத்திற்கு 20 ஆயிரம் கார்களை விற்பனை செய்ய உள்ளதாகவும் டாடா மோர்டார்ஸ் நிறுவனத்தின் துணைத் தலைவர் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## முகேஷ் அம்பானிக்கு

## ரூ.2 1/2 கோடி சம்பளம்



அமெரிக்க வங்கி வாரியத்தில் இணைந்துள்ள முகேஷ் அம்பானிக்கு, பாங்க் ஒப் அமெரிக்கா ஆண்டுக்கு ரூ.2.5 கோடிக்கு மேல் சம்பளம் கொடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்காவின் வங்கி வாரியத்தில் கடந்த மாதம் அவருக்கு முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டது. அதில் பணிபுரிவதால் பாங்க் ஒப் அமெரிக்கா ரூ.28 லட்சம் மதிப்பிலான பங்குகளுடன் ஆண்டுக்கு மொத்தமாக ரூ.2.5கோடிக்கு மேல் சம்பளம் கொடுக்கவுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

இதேவேளை பெற்றோலியம், பெற்றோலியப் பொருட்கள், சில்லறை வர்த்தகம், ஸ்போர்ட்ஸ் மனேஜ்மென்ட் மற்றும் தொலைத்தொடர்புத்துறை உள்ளிட்ட துறை வர்த்தகங்களில் முடிசூடா மன்னனாக விளங்கும் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டட் நிறுவனம் இந்தியாவில் நிதிச் சேவையில் களமிறங்க உள்ளதாக அறிவித்துள்ளது.

# மனைப்பொருளாதார அலகுகள் அபிவிருத்தித் திட்டம்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
**PhD. Durham**
முன்னாள் துணைவேந்தர்

அண்மையில் இலங்கை அரசாங்கம் 'திவி நகும' என்னும் மனைப் பொருளாதார அலகுகள் அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. இத்திட்டம் ஒரு பக்கத்தில் நுண் மட்ட அபிவிருத்திப் பண்புகளையும், மறுபக்கத்தில் பாரம்பரிய உயர் சமூக விழுமியங்கள் உடனான குடும்பப் பொருளாதாரத்தை வலுச் சேர்ப்பதற்கான இலக்குகளைக் கொண்டுள்ளது.

அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பத்தில் தேசிய மட்டத்தில் தொடங்கி, பின்னர் உபதேசிய மட்டம், மாகாண மட்டம், மாவட்ட மட்டம், பிரதேச செயலகப் பிரிவு மட்டம், கிராம அதிகாரிப் பிரிவு மட்டம் எனப் படிப்படியாக இறங்கி, பின் கிராம மட்டம், குடியிருப்பு அயல் மட்டம் என விரிவுபட்டுக் காணப்படுகிறது. மக்களிடத்து அபிவிருத்தியைக் கொண்டு செல்வதற்கும், சகல பரப்புகளும் அபிவிருத்தி அடைவதற்கும் அவிருத்திக்கான அலகு மேலிருந்து கீழ் நோக்கியும், பெரிதிலிருந்து சிறிதாகவும் வரவேண்டிய தேவை ஏற்பட்டது. இன்று இந்நிலையில் மனைப்பொருளாதார அலகை மையமாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மனைப்பொருளாதார அலகு தான் மிகச் சிறியதும் படிமுறை அமைப்பில் அடிநிலையில் இருப்பதும் ஆகும்.

ஒவ்வொரு மட்ட அபிவிருத்தியும் ஒன்றுடன் ஒன்று இணைந்து முழுமையாக்கவல்லதாகவும் நன்மைபயப்பதாகவும் உள்ளது. கீழ் மட்ட அபிவிருத்தி முயற்சிகள் மேல் மட்ட அபிவிருத்திகளுக்குப் பங்களிப்புச் செய்கின்றன. ஆனால் மேல் மட்ட அபிவிருத்திகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படாதுவிடின், அபிவிருத்தியின் பலாபலன்கள் கீழ்மட்டத்தைச் சென்றடையாது. இதனால் கீழ்மட்ட அபிவிருத்தி முழுமையான அபிவிருத்திக்கு ஏற்ற தந்திரோபாயமாகக் கருதப்படுகிறது.

இத்திட்டத்தின்மூலம் நாடு தழுவிய ரீதியில் 10 இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளின் உற்பத்தித் திறன் மேம்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் முதலாம் கட்டம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் பங்குகொள்ளும் ஒவ்வொரு பயனாளி குடும்பத்திற்கும் ரூபா 10,000 பெறுமதியான பொதி ஒன்று வழங்கப்படும். இப்பொதி உற்பத்திக்குத் தேவையான பொருட்களைக் கொண்டுள்ளது.

உதாரணமாக, விவசாயம் சார் பயனாளிக்கு விதைகள், உரம், கிருமிநாசினி போன்ற பொருட்கள் அவரின் பொதியில் வழங்கப்பட்டிருக்கும்.

இத்திட்டத்தில் மூன்று துறைகள் அபிவிருத்தியின் பொருட்டு இனங் காணப்பட்டுள்ளன. அவையாவன,

01. விவசாயமும் கமத்தொழில் நடவடிக்கைகளும்
02. கடற்றொழிலும் கால்நடை வளர்ப்பும்
03. சிறு கைத்தொழில் முயற்சிகள்

இம்மூன்று துறைகளுள்ளும், விவசாயம் சார் நடவடிக்கையில் பெரும்பாலோர் பங்குகொள்வதினால் இத்துறையே முதன்மை பெறுகின்றது.

களத்தில் கிராம அதிகாரிகள், சமுர்த்தி அலுவலகர்கள், குடும்ப நல அலுவலகர்கள், கமநல அபிவிருத்தி அலுவலகர்கள் இத்திட்டத்தை முன்னெடுப்பவர்களாகவும், உதவியாளர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் பணிபுரிவர்.

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளி குடும்பம் தமது வீட்டு வளவுப் பகுதியில் இயற்கை வளத்தையும், மனித வளத்தையும் பயன்படுத்தி மனைப்பொருளாதாரச் செயற்பாடுகளை முன்னெடுத்து உற்பத்தியை அதிகரிப்பதே திட்டத்தின் இலக்காகும். இச்செயற்பாடுகளால் குடும்ப வாழ்வாதாரங்கள் விருத்தி செய்யப்படும். பயனாளிகள் குடும்பம் தமது தேவைகளின் ஒரு பகுதியைத் தாமே உற்பத்தி செய்யவும், மேலதிகமானவற்றை விற்றுப் பணமாக்கவும் முடியும். இச்செயற்பாடுகள் மூலம் வறுமையைத் தணிக்கவும், சுய வேலைவாய்ப்பை அல்லது பகுதி நேர வேலை வாய்ப்பைப்பெருக்கவும் முடியும். மேலும் தமது வளவில் விளைந்த மாசற்ற, புத்தம்புதிய காய்கறி, பழவகை என்ற மன நிறைவு ஏற்படுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் இச் செயற்பாட்டில் ஈடுபடுவதனால் ஆக்கரீதியான பொழுது போக்கும், அதன் வழியாக உடற் பயிற்சியும் கிடைப்பது நல்விளைவுகளாகும். குடும்பங்கள் தற்சார்புப் பொருளாதாரப் பண்பைப் பெற முடிகின்றது. இத்திட்டத்தின் மூலம் சம்பந்தப்பட்ட பயனாளிகளின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதுடன், உள் ளூர், பிரதேச, தேசியப் பொருளா தாரமும் மேம்பாடு அடையும்.

இத்திட்டம் யாழ்ப்பாண மாவட்டத்தில், நல்முறையில் முன்னெடுக்கப்படுமாயின் மக்கள் நிறைவான நன்மைகளைப் பெறுவர். இம்மாவட்டத்தில் விவசாய உற்பத்தி சிறிய தோட்டங்களில் இருந்தும், வீட்டு வளவுகளில் இருந்தும் பெறப்படுகின்றன. இம் மாவட்டத்தில் குறிப்பாக செம்மண் பிரதேசத்து நிலப்பயன்பாடு செறிவானதும் சிக்கலானதும் ஆகும்.

ஒவ்வொரு மனையும் சிறியளவு வளவையாவது கொண்டிருக்கும். நகர்ப் புறங்களில் வர்த்தகக் கட்டடத்தொகுதிகள், ஒருசில தொடர்மாடிக் குடியிருப்புக்கள் மற்றும் செறிவான குவிந்த குடிசை வீடுகள் தவிர்ந்த ஏனைய குடியிருப்புக்கள் யாவும் சிறியளவு நிலப்பரப்பைக் கொண்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் வீட்டு வளவுப் பகுதியில் வான் பயிரும் செய்பயிரும் காணப்படுகின்றன. குறிப்பாக நீர்வசதியுள்ள பகுதியில்- கிணற்றைச் சுற்றி வாழை, எலுமிச்சை, கமுகு, செவ்விளநீர் போன்றனவும், வளவின் பிறபகுதிகளில் மா, பலா, ஈரப்பலா, நெல்லி, முருங்கை, வேம்பு, தென்னை போன்றனவும் காணப்படும்.

வீட்டுத் தோட்டப் பயிர்களின் பண்பு குடாநாட்டுக்குள் பிரதேசரீதியாக, வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவுப்பகுதி, பெரிய யாழ்ப்பாணம் என வேறுபடும். வலிகாமத்தில் செம்மண் பிரதேசத்தில் நெருக்கமான பசுமையான மூன்றடுக்கு வீட்டுத் தாவரங்கள்-தென்னை, மா, பலா எனவும், வாழை, பப்பாசி, கொய்யா எனவும் கீழ் இராசவள்ளி, வற்றாளை, மரவள்ளி எனவும் காணப்படும். உரும்பிராய், ஊரெழு, ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் போன்ற கிராமங்களில் மூன்றடுக்குத் தாவரப் பண்பைக் காணலாம். தென்மராட்சிப் பிரதேசத்தில் தென்னை, பனை, மா, பலா, முருங்கை முக்கியம் பெறுகின்றன.

வடமராட்சியில் தென்னை, பனை, மா, பலா, முருங்கை ஆகியன காணப்படும். வடமராட்சி மேற்கு பகுதி, வடமராட்சி கிழக்குப் பகுதியிலும் பார்க்ககூடிய மரப் பயிர்களைக் கொண்டுள்ளது. வடமராட்சி கிழக்குப் பகுதியில் தென்னையும், பனையுமே முக்கிய மரங்களாகும்.

தீவுப் பகுதியில் பனை, தென்னை, மாதுளை போன்றனவும், பெரிய யாழ்ப் பாணத்தில் வாழை, பப்பாசி, முருங்கை, அகத்தி, மா, பலா, தென்னை போன்றன முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பெரிய யாழ்ப்பாணத்தில் வீட்டு வளவு சிறிதாக இருப்பினும் மக்களின் ஊக்கம் காரணமாக வீட்டுத் தோட்ட பயிர் அடர்த்தியும், செயற்பாடுகளும் கூடுதலாகவுள்ளன.

இம்மாவட்டத்தில் கிடைக்கும் மா, பலா பழங்களின் உற்பத்தி முழுமையாக வீட்டு தோட்டங்களில் இருந்தே கிடைக்கின்றது. வாழை உற்பத்தியில் வீட்டுத்தோட்டப் பகுதியின் பங்களிப்பு மிகவும் உயர்வாக இருக்கின்றதெனினும், ஒரு சிறு பங்கே சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றது. பெரிய யாழ்ப்பாணப் பகுதியில் வீட்டுத்தோட்டத்தில் உற்பத்தியாகும் வாழைப்பழம் ஏறக்குறைய குடியிருப்பாளர்களாலேயே நுகரப்படுகிறது. இதேபோல் சந்தைக்கு வரும் கறிவேப்பிலை வீடுகளிலேயே பெறப்படுகின்றது.

இம்மாவட்டத்தில் வாழும் குடும்பங்கள் ஒவ்வொன்றின் காய்கறி, பழவகை, தேங்காய், பனைப் பொருள், விறகுத் தேவைகளின் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியை அவர்களின் வீட்டு வளவுகளில் இருந்து பெறமுடிகின்றது. வீட்டுத் தோட்டப் பண்பும், வருமானமும் மாவட்டத்துக்குள் பிரதேச ரீதியாக வேறுபடுகின்றன. தீவுப்பகுதியில் காய்கறி, பழவகை உற்பத்தி குறைவாகவும், தென்னை, பனம்பொருட்கள், விறகு கூடுதலாகவும் உள்ளன. வலிகாமத்தில் காய்கறி பழவகைகள் உற்பத்தி கூடுதலாகவும், தென்னை, பனம் பொருட்கள் உற்பத்தி குறைவாகவும் உள்ளன.



இம்மாவட்டத்தில் மனைப் பொருளாதாரத்தில் குறிப்பாக விவசாயம் சார் நடவடிக்கைகளை மேம்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம். மாவட்டம் இயற்கையாக வறள் நிலத்தாவரங்களைக் கொண்டு இருக்கின்றது.

(14ஆம் பக்கம் பார்க்கவும்)

**நன்றாகக் காய்க்கும் இளம்தென்னைமரம் வளவில் நிற்குமாயின் அதில் குறைந்தது ஒரு குலையில் 10 தேங்காயாவது பெறமுடியும். நல்ல மரங்களில் ஒரு குலையில் 20 காய்கூட இருப்பதுமுண்டு. ஒருமரத்தில் இருந்து மாதம் 10 தேங்காய் பெறப்படின் இன்றைய விலையில் அது ரூபா 600 ஆகும். ஒரு ஓலை சோடி கிடுகாக மாறின் அதன்விலை ரூபா 30. மேலும் கோம்பைகள், பாலைமூலம் குறைந்தது ரூபா 25 பெறமுடியும். ஒரு தென்னைமூலம் குடியிருப்பாளர் 650 ரூபா வருமானத்தை பெறமுடியும். இதேபோல ஒரு கிலோ இதரை வாழைக்காய் தற்பொழுது வியாபாரிகளால் 40 ரூபாவிற்குமேல் வாங்கப்படுகின்றது. 10 கிலோ நிறையுடைய ஒரு வாழைக்குலையின் இன்றைய பெறுமானம் 400 ரூபாவிற்கு மேற்பட்டது. இதுபோல ஒரு பெரிய பலாப்பழம் ரூபா 250க்கு அதிகமாக விலைப்படுகிறது. ஆகவே சராசரி 10 பலாப்பழம் உள்ள ஒரு மரத்தின் கூறுவிலை ரூபா 2500க்கு அதிகமாக உள்ளது. இதுபோல கறுத்தக்கொழும்பான் மாம்பழத்தின் விலை ரூபா 50-75க்கு இடைப்பட்டதாக உள்ளது. ஆகவே நன்றாகக் காய்க்கும் மாமரம் ரூபா 5000க்கு அதிகமாக விலைப்படும். இன்று ஒரு கிலோ முருங்கைக்காயின் விலை ரூபா 500-550க்கு இடைப்பட்டதாக இருக்கிறது. இதுபோல் ஒருகிலோ பப்பாசியின் விலை ரூபா 90க்கு மேல் உள்ளது.**



வீட்டுத்தோட்டத்தில் பலாவின் உற்பத்தியை படத்தில் காணலாம்

மக்கள் வங்கியின் யாழ். கன்னாதிட்டி கிளையில் வனிதா வாசனா மற்றும் ஆஷ்சர்ய வைப்புக்களுக்கான சீட்டிழுப்புகள் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட கலாநிதி நா. தனேந்திரன், கிராமசேவையாளர் சுந்தர்ராஜன், ஆசிரியர் குமரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் வங்கி முகாமையாளர் அ.பிரான்ஸிஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்திற்கு பரிசுப் பொருள் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# லசந்த படுகொலை சம்பவத்தை மூடி மறைப்பதற்கு அரசு முயற்சி

## சோனாலி விக்கிரமதுங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையை மூடிமறைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுப்பதாக அவரின் மனைவி சோனாலி விக்கிரமதுங்க தெரிவித்துள்ளார்.

லசந்தவை யார் படுகொலை செய்தார்கள் என்பது தனக்கு தெரியவில்லை எனவும் இந்தப் படுகொலை தொடர்பில் நியாயமான விசரணைகள் முன்னெடுப்பதற்கு அரசியல் ரீதியில் அரசாங்கத்திற்கு எந்தவொரு அக்கறையும் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் கொலையாளிகளை கைது செய்வது சிறுபிள்ளைத் தனமான ஒன்றாக மாறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் சட்ட நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் அழுத்தம் கொடுப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# சந்திரனை சுற்றி தென்படும் ஒளிவட்டத்தால் பூமிக்கு பாதிப்பில்லை

சந்திரனைச் சுற்றி தென்படும் ஒளிவட்டத்தினால் பூமிக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படமாட்டாது என வான சாஸ்திரவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்திர ஒளியானது, அதற்கு அருகாமையிலுள்ள பனிபடிமங்களில் உராய்வதன் காரணமாகவே இந்த ஒளிவட்டம் உருவாகியுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் சந்தன ஜயரத்ன கூறினார். சந்திரனை சுற்றி ஒளிவட்டம் தென்படுவது வழமைக்கு மாறான வேளைகளில் இந்த நிலைமை ஏற்படக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நிலத்தில் இருந்து வெளியேறும் நீராவியானது, வானத்தில் பனிப் படிமங்களாக உராய்ந்து காணப்படுகின்றதுடன் அவற்றில் சந்திர வெளிச்சம் படுவதன் மூலமே இத்தகைய ஒளிவட்டம் தென்படுவதாக கலாநிதி சந்தன ஜயரத்ன விளக்கமளித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

கோப்பாய் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

மேற்படி கலந்துரையாடலுக்கு சகல அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



சர்வோதய விஷனின் அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட (DICA) பரீட்சை யா/சித்தங்கேணி வட்டு இந்து நவோதயா கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இப்பரீட்சையில் (Sky line ITC) நிறுவனத்தில் கல்விகற்கும் மாணவர்கள் பங்கேற்பதைப் படத்தில் காணலாம்.

2011.04 17

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 69 - பெட்ரியாக்கும் என்ற இடத்தில் இடம்பெற்ற போரின் பின்னர் விட்டேலியஸ் என்பவன் ரோம் பேரரசின் மன்னன் ஆனான்.

★ 1492 - வாசனைப் பொருட்களை ஆசியாவில் கொள்வனவு செய்யும் உரிமையை கொலம்பஸ் ஸ்பெயின் அரசிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

★ 1524 - இத்தாலி நாடுகாண் பயணி ஜோவானிடா வெரசானோ நியூயோர்க் துறைமுகத்தை அடைந்தார்.

★ 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியா கூட்டணியில் இருந்து விலகியது.

★ 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் வட கரோலினாவின் பிளைமவுத் நகரைத் தாக்கினர்.

★ 1895 - சீன ஜப்பான் போரை முடிவுக்குக் கொண்டு வந்த ஒப்பந்தம் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டது.

★ 1941 - இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியப் பேரரசு ஜேர்மனியிடம் சரணடைந்தது.

★ 1961 - அமெரிக்க உளவு நிறுவனமான சிஐஏயினால் பயிற்சியளிக்கப்பட்ட கியூபா அகதிகள் குழு ஒன்று பிடெல் காஸ்ட்ரோவைப் பதவியில் இருந்து அகற்றும் நோக்குடன் பிக்ஸ் விரிகுமாவில் தரையிறங்கினார்.

★ 1969 - செக்கோசிலவாக்கியாவின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அலெக்சாண்டர் டுப்செக் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 1970 - அப்போலோ 13 விண்கப்பல் பழுதடைந்த நிலையில் தனது பயணத்தை இடைநிறுத்தி பூமிக்குத் திரும்பியது.

★ 1971 - முஜிபுர் ரகுமான் தலைமையில் வங்களாதேச மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1975 - கம்போடியாவில் கெமர் ரூச்படைகள் தலைநகர் நாம் பென்னைக் கைப்பற்றின. கம்போடிய அரசு சரணடைந்தது.

★ 1986 - 335ஆண்டுகள் போரை முடிவுக்குக் கொண்டு வரும் ஒப்பந்தம் நெதர்லாந்துக்கும் சில்லி தீவுகளுக்கும் இடையில் கைச்சாத்தானது.

★ 2004 - இந்தியத் திரைப்பட நடிகை சௌந்தர்யா, பெங்களூரில் விமான விபத்தில் இறந்தார்.

### பிறப்புக்கள்

★ 1756 - தீரன் சின்னமலை, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1805)

★ 1894 - நிக்கிட்டா குருஷேவ், சோவியத் ஒன்றியத்தின் பிரதமர் (இ.1971)

★ 1916 - சிறிமாவோ பண்டாரநாயக்கா, இலங்கையின் பிரதம மந்திரி, உலகின் முதல் பெண் பிரதமர் (இ.2000)

★ 1946 - ஜோர்ஜெஸ் கோஹ்லெர், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (இ.1995)

★ 1966 - விக்ரம், தமிழ் திரைப்பட நடிகர்

★ 1972 - முத்தையா முரளிதரன், இலங்கைப் பந்துவீச்சாளர்.

### இறப்புக்கள்

★ 1761 - தொமஸ் பேயிஸ், ஆங்கிலேயக் கணிதவியலாளர்

★ 1790 - பெஞ்சமின் பிராங்கிளின், அமெ ரிக்க கண்டுபிடிப்பாளர் (பி. 1706)

★ 1942 - ஜீன் பெரின், நோபல் பரிசு பெற்ற, பிரெஞ்சு இயற்பியலாளர் (பி.1870)

★ 1975 - சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் துணைத்தலைவர், இரண்டாவது குடியரசுத் தலைவர் (பி. 1888)

★ 1979 - ஹென்ரிக் டாம், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1895)

★ 1994 - ரொஜர் ஸ்பெரி, மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1913)

# எண்தமிழ்-ஓர் ஆய்வு

01

புதிய- பழைய என இரண்டு அல்லாது இரண்டிற்கு மேற்பட்ட குறியீட்டு முறைகளை அரபு, சமஸ்கிருதம், கிரேக்கம், சீனம், உரோம எண்கள் கொண்டுள்ளன. தமிழில் ஒரே ஒரு குறயீட்டு முறை மாத்திரம் உண்டு. ஆதலால் திருத்தத்திற்கு உட்பாடாத எண்குறியீட்டு முறைப்பண்பு தமிழிற்கே இருந்துள்ளது.[8]

உலகம் முழுவதிலும் லட்சம்(Lakh) பல்வேறு சொற்களால் பயன்பட்டு வந்தது. ஆனால் 20ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் உலக மொழிகளில் நூறாயிரம் எனும் பதம் பயன்பாட்டிற்கு வந்தது. எனினும் தமிழர் பன்னெடுங் காலமாக நூறாயிரம் எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர்.

நூறாயிரம் முன் வரூஉங் காலை
நூறனியற்கை முதனிலைக்கிளவி
(தொல்,எழு,குற்,புண 6)
நூறாயிரங்கை ஆறறி கடவுள்
(பரிபாடல் 3ஆம் பாடல்வரி43)
ஏழ்பிறப்படியேம் வாழ்க நின்
கொற்றம்
பன்னூறராயிரத்தாண்டு வாழியர்(9)

பூச்சியம் கணிதத்தில் மிகப்பிற்பட்ட காலத்திலேயே பயன் படுத்தப்பட்டதாக பொதுவாகக் கருதப்படுகிறது. பிரித்தானிய கலைக்களஞ்சியத்திலும் செவரெஸ் சீபொக் (C650)[9] அடிப்படை எண்கள் பற்றியே குறிப்பிட்டுள்ளதால் அவர் பூச்சியத்தை அறியவில்லை என்று கூறப்படுகின்றது.[10] எஸ்.ஜி. மோர்லி என்பவர் "புராதன மாஜா நாகரிகம்" எனும் நூலில்[11] ஆரம்பத்தில் பூச்சியக்குறியீடு இந்தியாவில் பயன்பாட்டில் இருந்தது தொடர்பாக பல மேற்கோள்கள் காட்டப் பட்டாலும் இவற்றில் எதுவும் ஆதாரமற்றவை என உறுதிப்படுத் தப்பட்டு விட்டன. செவரெஸ் சீபொக் குறிப்பிடும் ஒன்பது குறியீடுகளானது பூச்சியப் பெறுமானம், இடப்பெறுமானம் ஆகியவற்றின்பன் பாடின்றி ஒன்பதுக்கு மேற்பட்ட எண்களைக் குறிக்கப்பயன்படாதுஎனக் குறியுள்ளார்.

ஆனால் "இந்தியாவின் பழைய சாசனங்களில் திகதிகளும் எண்களும் உரோமானிய,கிரேக்க, எபிரேய மொழிகளிலுள்ள குறியீடுகளைப் போலல்லாது பத்துக்களும் நூறுக்களும் வித்தியாசமான குறியீடுகளால் குறிக்கப்பட்டுள்ளன. இக்குறியீடுகள் கி.பி.595 ஆம் ஆண்டளவில் குஜராத்திலிருந்து பெறப்பட்டன" எனக் கூறப்பட்டுள்ளது.[12] பத்துக்கள் நூறுகளுக்கானகுறியீடுகள் அரேபியாவிலிருந்து பெறப்பட்டவையாக இருக்க முடியாது. அரேபிய எண்கள் ஆப்பு வடிவின. மேலும் 60 இன் மடங்குகளாகும். செவரெஸ் சீபொக்கின் காலம் கி.பி. 650. பத்து, நூறுகளுக்கான குறியீடுகளை வட இந்தியா அறிந்தது கி.பி.595 இல் ஆதலால் செவரெஸ் சீபொக்கின் குறிப்பை ஏற்றுக்கொள்ளலாம். எஸ்.ஜி. மோர்லி கூறிய கருத்து ஏற்றுக்கொள்ளமுடியாதது என்பதை பின்வரும் உதாரணங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**எண்குறியீடுகள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | ய |

100-ள 1000-சூ

2839 தமிழில் உசூஅளஙயகூ என எழுதப்படுகிற து.[13]

**பேரெண்கள்:**

10000 யசூ
50000 ருயசூ
100000 ளசூ
1000000 யளசூ
கோடி-ளளசூ எனக்குறிப்பிடப்பட்டுள்ளன.

உலுகிலுள்ள எண் குறியீடுகளைக் கருத்தில் கொண்டால் கிரேக்க, அரேபிய,எபிரேய, சீன, சமஸ்கிருத, சிங்கள எண்களில் பத்தின் மடங்குகளிற்குத் (10,20,30...) தனிதனிக் குறியீடுகள் உண்டு. அதனால் இவற்றிலிருந்து நவீன எண்கள் தோன்றியிருக்க முடியாது. பத்தின்மடங்குகளிற்கு குறியீடுகள் தனித்தனியாக அமையாது பத்தின் வலுக்களிற்கு (10, 100, 1000) மாத்திரம் குறியீடுகளை உடையவை எகிப்திய, தமிழ் எண்கள் மாத்திரமே. எனினும் எகிப்திய எண்களில் 30 ஐக்குறிக்க 10+10+10 என பத்துக்குரிய குறியீடு மூன்று தடவைகள் இடப்படும். ஆனால் தமிழில் நவீன எண்அடிப்படையில் 3X10 என்னும் கருத்தில் 3இற்குரிய குறியீடும் 10இற்குரிய குறியீடும் இடப்படும். ஆதலால் நவீன எண்களுக்குரிய முக்கிய பண்புகளான

1. ஒன்பது அடிப்படை எண்கள்
2. பத்தின்வலுக்களில்(10, 100, 1000) எண்பெறுமானம் அதிகரித்தல்
3. இடப்பெறுமான எண்ணக் கருத்தை வெளிக்கொணரக்கூடிய வகையில் எண் குறியீட்டுமுறை அமைந்திருத்தல்.

ஆகிய மூன்றும் ஒருங்கே தமிழ் தவிர்ந்த வேறு எந்த எண்முறையிலும் காணப்படவில்லை.

கூட்டலின் இலகுவாக்கம் பெருக்கல், கழித்தலின் இலகுவாக்கம், பிரித்தல் தமிழில் மாத்திரம் பூச்சியப் பயன்பாடின்றி அதற்குப்பிரதியீடாக தமிழ் எண் குறியீடுகளைப் பயன்படுத்தி பெருக்கி, பிரிக்க முடியும்.

உதாரணமாக:-

254 X 36

| | | | |
|---|---|---|---|
| | 200 | 50 | 4 |
| | | 30 | 6 |
| 1000 | 500 | 20 | 4 |
| 7000 | 600 | 20 | |
| 9000 | 100 | [illegible] | 4 |

தமிழில்:

| | | | |
|---|---|---|---|
| | உள | ருய | ச |
| | | ஙய | ச |
| கசூ | ருள | உய | ச |
| எசூ | சுள | உய | |
| கூசூ | கள | சய | ச |

இதேபோல 4752 ÷ 36

| | | | | |
|---|---|---|---|---|
| | | 100 | 30 | 2 |
| 30 6 | 4000 | 700 | 50 | 2 |
| | 3000 | 600 | | |
| | 1000 | 100 | 50 | |
| | 1000 | 000 | 80 | |
| | | | 70 | 2 |
| | | | 70 | 2 |

தமிழில்:

| | | | | |
|---|---|---|---|---|
| | | கள | ஙய | உ |
| ஙய சு | சசூ | எள | ருய | உ |
| | கசூ | கள | | |
| | கசூ | கள | ருய | |
| | கசூ | | அய | உ |
| | | | எய | உ |
| | | | எய | உ |

ஆதலால் எஸ்.ஜி. மோர்லி கூறிய பூச்சியம், இடப்பெறுமானம் இன்றிய எண்பயன்பாடு, பற்றிய கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

கடினமான பண்புகள் இலகுவாக்கப்படுவது இயல்பு அவ்வகையில் தமிழ் எண்கள் இலகுவாக்கப்பட்டிருக்கலாம்.

**இலகுவாக்கம்:**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | ய |
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | 10 |

மேற்படி இலகுவாக்க இயலாத எண்கள் க, சு, கூ என்பவையாகும். அரேபியர் இலகுவாக்கியமையால் அவர்களுடைய 1 என்னும் குறியீட்டை "க" ற்காக தமிழர் பயன்படுத்தியிருப்பர்.சு,கூ என்பவற்றில் கூ எனும் குறியீட்டில் 9 இற்கான அமைப்பு உண்டு.மேலும் இந்தக் குறியீட்டை வலஞ்சுழியாகவோ இடம் சுழியாகவோ சுழற்றிப் பெறுவதே 6 எனும் குறியீடு ஆகும். தஞ்சாவூர் பெரியகோவிலில் பொறிக்கப்பட்ட தமிழ் எழுத்துக்கள் ஆயிரம் வருடங்களாக மாற்றமடையவில்லை எனக்கூறப்பட்டுள்ளது. ஆதலால் பூச்சியக் குறியீடு கண்டுபிடிக்கப் பட்ட காலத்தில் தமிழ் எண் குறியீடுகள் மேற்காட்டியவாறே அமைந்திருக்கலாம்.

ஆதலால் நவீன எண்களை இந்து, அரேபிய எண்கள் என்பதைக் காட்டிலும் தமிழ் அரேபிய எண்கள் என்பதே சாலப்பொருந்தும்.

(முற்றும்)

செல்வி. க. நீலாம்பிகை

# ஆனந்த அலை

**ஆனந்தக் கண்ணீர்**

எனக்கு 5,6 வயது இருக்கும் போது பள்ளி விடுமுறையில், தாத்தா வீட்டிற்குச் செல்வேன்.அங்கு கொள்ளுப்பாட்டி இருப்பார்கள். அப்போது அவருக்கு 100 வயதிற்கு மேலிருக்கும். அவர் எப்போதும் தனது காலை உணவில் பாதிக்குமேல் எடுத்து வீட்டைச் சுற்றியுள்ள எறும்புகளுக்கு கொஞ்சம் கொஞ்சமாகப் போடுவார்கள். அந்த எறும்புகள் சாப்பிடும் போது பக்கத்திலேயே உட்கார்ந்து கண்ணீருடன் அதை இரசிப்பார்கள். நேரம்போவது தெரியாமல் அந்த ஆனந்தத்திலேயே திளைத்திருப்பார்கள். ஆனால் தாத்தா, வீட்டிலிருக்கும் மற்றவர்கள் "நீ இப்படியே செய்து கொண்டிருந்தால் சாப்பாடு இல்லாம செத்துடுவே" என்று அந்தப் பாட்டியைத் திட்டுவார்கள். அனால் அப்படித்திட்டியவர்கள் எல்லாம் இவருக்கு முன்னால் இறந்து விட்டார்கள். பாட்டி 114 வயதுவரைக்கும் இருந்தார். அதிகம் திட்டினால் சாப்பிடாமலேயே எனக்கு வயிறுநிறைந்து விட்டது என்று சொல்லிவிடுவார். ஆனால் அவர் அனுபவத்தில் அதுதான் உண்மை. எறும்பு சாப்பிடும்போதே இவருக்கும் வயிறு நிறைந்து தேவையான சக்தியும் கிடைக்கிறது. அப்படித்தான் அவர் வாழ்ந்தார்.அதை சரியாகப் புரிந்து கொள்ள எனக்குப் பல வருடங்கள் பிடித்தன. அவர் கண்களில் கண்ணீர் வந்தபோது அது என்னவென்று புரியவில்லை. ஆனால் அவரைப் பார்க்க நன்றாக இருந்தது. எதுவுமே தேவையில்லாத்து போல் அப்போது மிகவும் ஆனந்தமாக இருப்பார்கள். என் அனுபவத்தில் ஆனந்தக் கண்ணீரை முதன் முதலில் பார்த்தது அவரிடம்தான்.

நான் சிறுவனாக இருந்தபோதும் எனது கண்களில் ஒரு முறை கண்ணீர் வந்தது. எனக்கு மிகவும் வெட்கமாகிவிட்டது. எல்லோர் முன்னிலையிலும் கண்ணீர் வந்தது. அப்பொழுது நான் ஒரு உறுதி எடுத்தேன். உயிரே போனாலும் கண்ணீர் விடக்கூடாது. என்று முடிவெடுத்தேன். பின்னர் 25 வயது வரைக்கும் ஒரு சொட்டுக் கண்ணீர் வராதவாறு வாழ்ந்து வந்தேன்.

ஆனால் ஒரு நாள் மைசூர் சாமுண்டி மலைமேலே போய் உட்கார்ந்தேன். அது வரைக்கும் 'நான் என்பது, இந்த உடலுக்குள் இருக்கும் உயிர் மட்டும்தான் என்ற உணர்வோடு இருந்தேன். அந்த உணர்வு மிகவும் உறுதியாக இருந்தது. சிறிது நேரம் அங்கு உட்கார்த பின் நான் எங்கிருக்கிறேன் என்ற புரியவில்லை. எல்லா இடத்திலும் சுற்றி இருக்கிற மாதிரி இருந்தது. ஐந்து நிமிடம் அல்லது பத்து நிமிடம் உட்கார்ந்திருப்பேன். நாலரை மணிநேரம் அங்கேயே உட்கார்ந்திருக்கிறேன். என் கண்களிலிருந்து கண்ணீர் அதிகமாக வந்து கொண்டிருந்தது. அது ஆனந்தக் கண்ணீர். சட்டையெல்லாம் நனைந்து விட்டது. ஆனால் கோபமில்லை, வெட்கமில்லை, துன்பமில்லை. உடலினால் கட்டுப்படுத்த முடியாதபடி ஒரு ஆனந்தம். அந்த ஆனந்தக்கண்ணீர் வந்து கொண்டே இருந்தது. அப் பொழுது நான் நினைத்தேன். இவ்வளவு நாள் என் கண்களில் கண்ணீர் வந்தால் அசிங்கம் என்று நினைத்தேன், ஆனால் இது இவ்வளவு அழகாக இருக்கிறதே, இந்தக் கண்ணீர்



ஆன்மீகம் 27

என் கண்களிலிருந்து மட்டும் வராமல், உலகத்தில் அனைவருக்குமே வந்தால் எப்படியிருக்கும் என்று கற்பனை பண்ணியிருந்தேன். அது கடந்த 26 வருடத்திற்குப் பிறகு, உங்கள் முன்னால், அது இப்போது, ஆனந்த அலையாக நடக்கிறது.

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# 'கர' வருடம் உங்களுக்கு எப்படி?




(மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம் வரை)

**குருவின் பார்வை பலமாகும்!**
**கொடுக்கும் சுகமோ ஏராளம்!**
***செல்லும் இடங்களிலெல்லாம் செல்வாக்கு அதிகம் பெற்ற சிம்ம ராசி நேயர்களே!***

விடாமுயற்சி இருந்தால் விதியைக் கூட மாற்றிவிடலாம் என்று சொல்பவர்கள் நீங்கள். உங்களுக்கு இந்தப் புத்தாண்டு ஒப்பற்ற வாழ்க்கையைக் கொடுக்குமா? உலாவரும் கிரகநிலைகள் சாதகமாக இருக்கின்றதா? நிலர் என்றழைக்கப்படும் சந்திரன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிப்பதால், நினைத்ததை எல்லாம் நிறைவேற்றிக்கொள்ள இயலுமா? என்று நீங்கள் சிந்திப்பீர்கள்.

உங்கள் கனவுகள் எல்லாம் நனவாகும் விதத்தில்தான் கர வருடம் பிறக்கின்றது. வருடத் தொடக்கத்திலேயே குரு பார்க்கப் போகிறார். எனவே, வாய்ப்புகள் எல்லாம் வாயில் கதவைத் தட்டும். ஆனால், இந்த வருடம் தொடங்குகிற பொழுதே ஏழரைச் சனி வக்ரம் பெறுகிறார்.

எட்டாமிடத்தில் மூன்று கிரகங்கள் முற்றுகையிடுகின்றன. சகட யோகத்தின் பின்னணியில் செயற்பட்டு வந்த இந்த இராசிக்காரர்களுக்கு இனி விமோசனம் கிடைக்கப் போகின்றது. குரு மற்றும் செவ்வாய் மாறும் வரை கொஞ்சம் பொறுத்திருப்பது நல்லது.

உங்கள் ஜாதகத்தில் சூரியபலம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்த்தும், உங்கள் வாழ்க்கைத் துணையின் ஜாதகத்தில் சனியின் பலம் எப்படி இருக்கின்றது என்பதைப் பார்த்தும் நீங்கள் செயற்பட்டால், வாழ்வில் வெற்றி மீது வெற்றி வந்துகொண்டே இருக்கும். வருடத் தொடக்கத்தில் வரும் குருப்பெயர்ச்சிக்கு பின்னர் இராகு-கேதுவும் பெயர்ச்சியாகிறார்கள். இது ஓரளவு தொழில் வளத்தைப் பெருக்கும்.

அதன்பின்னர் வரும் சனிப் பெயர்ச்சிதான் உங்களுக்கு அற்புதப் பலன்களை அள்ளி வழங்கும். எனவே, ஏழரைச் சனி முழுமையாக விலகும் இந்த நேரத்தில் ஏதேனும் ஒரு ஆலயத்திற்குச் சென்று, சனி பகவானுக்கு எண்ணெய் காப்பிட்டு, எள்ளோதரை நைவேத்தியமிட்டு, நீல வண்ண வஸ்திரம் அணிவித்து, நீல நிற மாலை சாற்றி சனீஸ்வர பகவானை வழிபட்டால் சந்தோஷத்தைத் தக்கவைத்துக் கொள்ள இயலும்.

சனீஸ்வர தலங்களுக்கு திருவோணம், அவிட்டம், உத்தராடம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் அல்லாத மற்ற நாட்களில் சென்று அன்னதானம், சொர்ணதானம், வஸ்திரதானம் போன்றவற்றில் இயன்றதைக் கொடுத்து வழிபட்டு வந்தால் இல்லத்தில் நல்லது நடக்கும், உள்ளத்தில் அமைதி கூடும்.

*24.07.2011* முதல் *10.09.2011* வரை சனியை செவ்வாய் பார்க்கும் காலத்தில் எந்த முடிவையும் நினைத்த மாத்திரத்தில் எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதோடு, மன முருகி வழிபாட்டை மேற்கொண்டால் விரயங்களில் இருந்து தப்பிக்க இயலும்.

**கம்பீரமான தோற்றத்தோடு காரியங்களைச் சாதிப்பவர்கள்!**

சுயநலமும் பொதுநலமும் இணைந்து காணப்படும் உங்களை பகைத்துக் கொள்ள யாரும் பயப்படுவர். சீறும் குணமும் சிரிக்கும் குணமும் உங்களுக்கு மாறி மாறி வந்து கொண்டே இருக்கும். பேரும் புகழும் உங்களுக்கு அதிகமாகவே இருக்கும்.

களத்திர ஸ்தானாதிபதி சனி என்பதால் வாழ்க்கைத் துணை வழியே அடிக்கடி பிரச்சினைகள் வரும். பரிகாரங்கள் மூலம் ஒற்றுமையைப் பலப்படுத்திக் கொண்டாலும், சிறிய விடயங்கள்கூட பெரிதாகி பிரச்சினைகளை உருவாக்கலாம். புகழுக்காக ஆசைப்படும் நீங்கள், நடுவயதில்தான் தொடுவானத்தில் இருக்கும் சூரியனைப் போல பிரகாசிப்பீர்கள்.

**கனவுகளை நனவாக்கும் குருப்பெயர்ச்சி!**

கர வருடத் தொடக்கத்தில் அதாவது 08.05.2011 அன்று குருப் பெயர்ச்சி நடைபெறப் போகிறது. உங்கள் இராசிக்கு 5, 8 இற்கு அதிபதியான குரு பகவான் மேட இராசியில் சஞ்சரித்தபடி, அது பார்க்கும் பார்வை முதன்முதலில் உங்கள் இராசியில்தான் பதிவாகின்றது. எனவே சகல பாக்கியங்களும் உங்களுக்கு வந்து சேரப்போகின்றது.

**"ஒன்பதில் குருவும் வந்தால்,**
**உயர்வுகள் வந்து சேரும்!**
**நண்பர்கள் ஒத்துழைப்பால்,**
**நலம் யாவும் வந்து கூடும்!**
**இன்பத்தின் எல்லை காணும்**
**இனியதோர் வாழ்வு கிட்டும்!**
**பொன்னான தொழில் தொடங்க**
**புதுப்பாதை அமையும் உண்மை!"**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் உங்களுக்கு மன்னவன் குரு பொன்னான எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கப் போகிறார். அதன் பார்வை 1, 3, 5 ஆகிய இடங்களில் பதிவதால், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். பணப் பிரச்சினைகள் அகலும்.

புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் கைகூடிவரும், சகோதர ஒற்றுமை பலப்படும்,வழக்குகளில் வெற்றி கிட்டும், கல்யாண கனவுகள் நனவாகி மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கும், கற்ற கல்வியில் இருந்த தடை அகலும், வெற்றிச் செய்திகள் வீடு தேடி வந்து கொண்டே இருக்கும்.

குரு உங்கள் இராசிக்கு 5, 8 இற்கு அதிபதியாவதால், உங்கள் வாரிசுகளால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். இருப்பினும், குழந்தைகளின் செயற்பாடுகளில் நீங்கள் அக்கறை காட்டுவது அவசியமாகும். வெளிநாடுகளில் படிக்கும் அல்லது வேலை பார்க்கும் உங்கள் பிள்ளைகளிடம் அடிக்கடி தொலைபேசி மூலமாவது தொடர்பு வைத்துக் கொள்வது நல்லது.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

மே மாதம் 16ஆம் திகதி விருச்சிக இராசியில் ராகுவும் ரிஷப இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இதுவரை உங்கள் இராசிக்கு ஐந்தாமிடத்தில் சஞ்சரித்து வந்த இராகு நான்காமிடத்திலும் பதினோராமிடத்தில் சஞ்சரித்து வந்த கேது இனி பத்தாமிடத்திலும் சஞ்சரிக்கப் போகிறார்கள். எனவே, அலைச்சல் அதிகரிக்கும். ஆதாயம் எதிர்பார்த்ததைக் காட்டிலும் ஓரளவே கிடைக்கும். பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

பத்தாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் பணிகளில் ஏற்பட்ட தொய்வு அகலும். கட்டாய ஓய்வு பெற்ற பின்னரும் கூட, உங்களை வேலையில் அமர்த்த முன்வருவர். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். எதிர்ப்புகளின் காரணமாக உத்தியோகத்தில் ஏற்பட்ட இடமாற்றம் நன்மையாகவே முடியும்.

நான்காமிடத்தில் ராகுவால் ஆரோக்கிய பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். மருத்துவச் செலவு கூடும். தாய் மற்றும் பங்காளிகளின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. சொத்துகள் வாங்கும் பொழுது, ஆராய்ந்து கையெழுத்திடுவதே உத்தமம்.

**ஏழரைச் சனி விலகி இனிமை தரும் நேரம்!**

இதுவரை உங்கள் இராசியோடு இணைந்து ஏழரைச் சனியாக வந்த சனிபகவான் இப்பொழுது உங்கள் இராசியை விட்டு விலகப் போகிறது. விலகும் சனியை முன்னதாகவே வழிபட்டால் நிலையான புகழும், நிம்மதியும் கிடைக்கும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். கலையார்வம் மிக்கவர்களோடு இணைந்து பணியாற்றி, காரிய வெற்றி காணப்போகிறீர்கள்.

கர வருடத்தில் விலகும் சனியால் வரவு அதிகரிக்கும். வாய்ப்பு வாயில் கதவைத் தட்டும். நெஞ்சை நிமிர்த்தி உங்களோடு வாதிட்டவர்கள் எல்லாம், இனி உங்களைத் தஞ்சமடைவர். அரச அதிகாரிகளின் நட்பாலும் அரசியல்வாதிகளின் பழக்கத்தாலும் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!**

வருடத் தொடக்கத்திலேயே வக்ரமடைகிறார். *14.04.2011* முதல் *09.06.2011* வரை வக்ர இயக்க காலத்தில் சனி இருக்கும்

சிவல்புரி சிங்காரம்

பொழுது, வாழ்க்கைத் துணை வழியே சில பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். எதிரிகளின் பலம் கூடும். மற்றவர்களுக்கு நீங்கள் நன்மை செய்தாலும் அதைத் தீமையாகவே கருதுவர். உத்தியோகத்தில் நீண்டதூரப் பயணங்களும் உத்தியோக மாற்றங்களும் உருவாகலாம். இக்காலத்தில் எள் தீபமேற்றி சனி பகவானை வழிபடுவதோடு, ஆஞ்சநேயரையும் வழிபட்டு வருவது நல்லது.

*31.08.2011* முதல் *15.12.2011* வரை குருவக்ரம் பெறும்பொழுது, குழந்தைகள் வழி பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம். மருத்துவச் செலவுகள் கூடும். திட்டமிட்ட காரியங்களில் திசை மாற்றம் ஏற்படலாம். இக்காலத்தில் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது. திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபட்டால் வளங்களும் நலங்களும் வந்து சேரும்.

**பலன்தரு பரிகாரம்!**

ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை நேரத்தில் விரதம் இருந்து, சூரிய பகவானை வழிபட்டு வந்தால் சுகங்களும் சந்தோஷங்களும் வந்து சேரும்.

(தொடரும்)

# வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சித்திராப்பூரணை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றிப் புனித தீர்த்தத்தில் சித்திராப் புபூரணை நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

இதில் சித்திராப் பூரணை தீர்த்தோற்சவமும் தர்ப்பணாதி அனுட்டானங்களும் வழமை போல் இடம்பெறவுள்ளது.

இதில் காலை 5.45 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் காலை 6.45 மணிக்கு விஷேட பூசையும் காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசையும் காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்ததில் தீர்த்தவாரியும் நடைபெறும்.

அத்துடன் காலை 8.30 மணிக்கு தீர்த்த மண்டபத்தின் அனுக்கிரகமும் காலை 10 மணிக்கு சுவாமி கோயிலுக்கு எழுந்தருளலும் நடைபெறும்.

அன்றைய தினம்காலை 8.30 மணிக்கு தீர்த்தவாரி முடிவுற்ற பின் அடியார்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த்தர்பணங்கள் செய்து கொள்ளவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# கட்டடங்களை பட்டியலிடும் நடவடிக்கைகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டுக்கான குடிசன மதிப்பீட்டுக்கு இணங்க அனைத்து கட்டடங்களையும் பட்டியலிடும் நடவடிக்கையை இம்மாத இறுதியினுள் நிறைவு செய்யவுள்ளதாக குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக குறித்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் சனத்தொகையில் ஆட்களை இனங்கண்டு கொள்ளல், வசிக்கும் இடத்தை உறுதியாக பதிவு செய்து கொள்ளல் போன்ற நோக்கங்களுக்காகவே மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன். குறித்த பட்டியலிடல் நடவடிக்கைகள் கிராம சேவகரால் மேற்கொள் ளப்படுகின்றன.

இலங்கையில் தற்சமயம் 14 குடிசன மதிப்பீடு நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. கடந்த 1981 ஆம் ஆண்டுக்கு பின்னர் நாடளாவிய ரீதியில் இடம் பெறும் முதலாவது குடிசன மதிப்பீடு இது வென்பது குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# சடலங்களாக மீட்கப்பட்ட தமிழக மீனவர்களின் இறப்பில் சந்தேகம்

## அவர்களின் உறவினர்கள் முறைப்பாடு

(கொழும்பு)

அண்மையில் காணாமல் போயிருந்த நிலையில் பின்னர் சடலங்களாக மீட்கப்பட்ட தமிழக மீனவர்களின் இறப்பில் சந்தேகம் நிலவுவதாக அவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கரையொதுங்கியிருந்த மீனவர் விக்டஸின் உடலில் அடிகாயங்கள் காணப்பட்டதாகவும் அவரது சகோதரர் முறை யிட்டுள்ளார்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் சமீபத்தில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற போது மர்மமான முறையில் உயிரிழந்தார்கள்.

தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த மீனவர் விக்டஸின் உடல் யாழ்ப்பாணம் அருகே கரை ஒதுங்கியது.

மேலும் இரு மீனவர்களான அந்தோனி ராஜ் மற்றும் ஜான் பால் ஆகியோரின் சடலங்கள் கடந்த வியாழக்கிழமை தொண்டி அருகே 15 கிலோ மீற்றர் இடைவெளியில் கரை ஒதுங்கியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் எவ்வாறு இறந்தார்கள் என்பது இன்னும் தெளிவாகாத நிலையில் விக்டஸின் உடலை அடையாளம் காணவும் அடக்கம் செய்யவும் யாழ்ப்பாணம் சென்று வந்த அவரது இளைய சகோதரர் லூமன் தனது சகோதரர் கடுமையாக தாக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார் என்றும் அதற்கு இலங்கைக் கடற்படைதான் காரணம் என்றும் குற்றம் சாட்டினார்.

கடந்த 2 ஆம் திகதி நடந்த உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவிடம் இலங்கை தோல்வியடைந்த காரணத்தினால் தான் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டு கொல்லப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தொண்டி அருகே கரை ஒதுங்கிய இரு மீனவர்களும் கூட தனது நெருங்கிய உறவினர்கள் தான் என்று லூமன் தெரிவித்தார்.

அனைத்து சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் இந்தச் சம்பவம் குறித்து இந்திய அதிகாரிகளிடம் முறைப்படி புகார் செய்யப்படும் என நிரபராதி மீனவர்கள் விடுதலைக்கான கூட்டமைப்பின் தலைவர் அருளானந்தம் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# புத்தாண்டு சிறப்பு நிகழ்வுகள்

(பருத்தித்துறை)

புத்தாண்டு சிறப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் மரதன் ஓட்டம், சைக்கிளோட்டம், தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல் ஆகிய விளையாட்டு போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இந்த விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ஸ்ரீ-3-10)

# இலங்கையின் மனித உரிமைகள் குறித்து அமெரிக்கா கவலைப்படத் தேவையில்லை

## ஐ.தே.க. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமைகள் குறித்து அமெரிக்கா கவலைப்படத் தேவையில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்கா பல வருடங்களாக மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில் அந்த நாடு ஏனைய நாடுகளின் மனித உரிமை மீறல்கள் குறித்து கவலை கொள்வதில் அர்த்தமில்லை என்று ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியையும் அதன் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவையும் துரோகி என்று பட்டம் சூட்டாமல் இலங்கையின் பிரச்சினைகளை உள்நாட்டிலேயே தீர்த்துக் கொள்ள முயலவேண்டும் என்றும் ஜயசேகர கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## கனேடிய பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டில் மாற்றமில்லை என கனேடியப் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் தெரிவித்துள்ளார்.

புலிகளை தடைசெய்யப்பட்ட இயக்கமாக தமது கன்சர் வேட்டிவ் கட்சி அறிவித்திருப்பதாகவும் புலி எதிர்ப்பு கொள்கைகளில் மாற்றம் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கன்சர் வேட்டிவ் கட்சி உறுப்பினர் ஒருவர் புலிகளுக்கு ஆதரவாக தொலைக்காட்சியில் தோன்றியமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ராகவன் பரஞ்சோதி என்ற கன்சர் வேட்டிவ் வேட்பாளர் கடந்த் நவம்பர் மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பரஞ்சோதியை எவ்வாறு கட்சி வேட்பாளராக தெரிவு செய்தீர்கள் என்ற கேள்விக்கு கனேடிய பிரதமர் ஸ்டீவன் ஹார்பர் நேரிடியாக பதிலளிக்கவில்லை. (ஸ்ரீ-2)

# கல்விமாணி மாணவர்களுக்கான விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகக் கல்வி மாணிப் பட்ட நெறி மூன்றாம் வருட மாணவர்களுக்கான விசேட கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு சகல மூன்றாம் வருட மாணவர்களையும் சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ். ஆர். சத்தியேந்திரப்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மனைப்பொருளா...

*(10ஆம் பக்கத் தொடர்ச்சி)*

எனினும் இப்பிரதேசங்களை கூட மனித நடவடிக்கை மூலம் நல்ல விவசாய பகுதிகளாக மாறக் கூடியதாக இருக்கின்றது. தீவுப் பகுதியில் சில தசாப்தங்களுக்கு முன்னர் பனை, தென்னை, மாத்திரமே காணப்பட்டன. இன்று மக்களின் முயற்சியால் மா மற்றும் பலவகை மரங்கள் அதிகளவில் வளருவதைக் காணமுடிகின்றது. மாவட்டத்தில் மனைப்பொருளாதாரத்தை முன்னெடுப்பதன் மூலம் குடும்ப வருமானத்தை பெருக்க முடியும். மேலும் உணவு, ஊட்டச்சத்தில் கூடியளவு முன்னேற்றமும் காணமுடியும்.

தற்பொழுது மாவட்டத்தில் வீட்டுத்தோட்டச் செயற்பாடு திட்டமிடப்படாத, ஒழுங்கற்ற செயற்பாடுகளால் உச்சப் பயனைப் பெறமுடியாதுள்ளது.

இங்குள்ள வளவுகளுள் இருக்கும் நிலம் உச்சமாகப் பயன்படுத்தப்படவில்லை. ஒருங்கிணைந்த நிலப் பயன்பாட்டு கட்டமைப்பு பேணப்படாததால் உற்பத்தி குறைவாக இருக்கிறது. மரங்களின் அடர்த்தி கூடியதால் நிழல் காரணமாக உற்பத்தி குறைவாக இருக்கின்றன. மேலும் வயது முதிர்ந்த மரங்கள் நீக்கப்பட்டு புதிய மரங்கள் நடப்படாமையும் உற்பத்திக்குறைவுக்கு முக்கிய காரணமாகும்.

மேலும் பயிர்கள்/ மரங்கள் உரம் இடாமலும், சரியான பயிர் முகாமைத்துவம் இன்மையும் உற்பத்திக் குறைவுக்கு காரணங்களாக இருக்கின்றன.

வாழிடப் பரப்புகளில் காணப்படும் மூன்று வகையான பயிர்கள் மலர் செடிகள், காய்கறி-செய்பயிர், வான் - மரப் பயிர்கள் சரியான ஒழுங்கில், ஒன்றுக்கு ஒன்று இடையூறு இல்லாமல் இருப்பின் நல்ல பயன்களைப்பெற முடியும். மேலும் மருத்துவ பயன்பாட்டிற்குரிய செடியினங்களை வளர்த்து அதன்மூலம் வீட்டுத் தேவையை பூர்த்தி செய்வதுடன் வருமானத்தையும் ஈட்டமுடியும்.

மனைப் பொருளாதார-குறிப்பாக விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்த, இதனது பல்வகை முக்கியதுவம் குறித்து மக்களிடையே பரப்புரை செய்ய வேண்டும். வீட்டு விவசாய நடவடிக்கைகளை மக்கள் மேற்கொள்ள அவர்களுக்கு அறிவை வழங்குவதுடன், உள்ளீடுகளை இலகுவாகப் பெறுவதற்குரிய வழிவகைகளை முன்னெடுப்பது அவசியமாகும்.

விவசாய நடவடிக்கைகள் போல் கடல்சார் தொழில்களைக் குறிப்பாக கரையோரப் பகுதியில் வாழும் மக்கள் முன்னெடுக்க முடியும். இதேபோல் மாடு, ஆடு, கோழி வளர்ப்புகள் மூலம் மக்கள் தங்களுக்குரிய பால்,முட்டை, இறைச்சி ஆகியவற்றை பெற்றுக் கொள்வதுடன் விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான மாட்டு எருவையும் பெறமுடியும். கோடிப் ́புறத்து கோழிவளர்ப்பு (*Backyard Poultry Project*) ஏழைகளின் வாழ்வாதார செயற்பாட்டில், குறிப்பாக அவர்களின் உணவு, ஊட்டச்சத்து முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகிப்பதாக அறியக்கிடக்கின்றது. இதனால்தான் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களது நுண்திட்ட செயற்பாட்டில் வறியவர்களுக்கு கோழிக்குஞ்சுகள் கொடுத்து வருகின்றன. கோழி வளர்ப்பு போல் யாழ்ப்பாணத்தில் ஆடுவளர்ப்பு குறிப்பாக வேள்விக்கான கிடாய் வளர்ப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

ஆடு வளர்ப்பில் பலர் ஈடுபாடு காட்டுகின்ற பொழுதும், ஆட்டுக்குட்டிகள், குறிப்பாக கிடாய் குட்டிகளை பெறுவது மிகவும் கடினமாக இருக்கின்றது. இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பார்க்க யாழ்ப்பாண மாவட்டமே வெள்ளாடு வளர்ப்பில் முக்கியம் பெற்று இருப்பதுடன், வேறு எந்த பகுதியிலும் பார்க்க இங்கேயே ஆட்டிறைச்சி உணவில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இதனால் ஆடு வளர்ப்புக்கு இங்கு பெரிய வாய்ப்பு காணப்படுகின்றது. இதனைச் சரியான முறையில் பயன்படுத்தினால் இத்தொழில் மூலம் நல்ல வருமானம் பெறமுடியும்.

விவசாய, கடல்சார் தொழில்களை கால்நடைவளர்ப்புப் போல மாவட்டத்தில் சிறு தொழில்களை அபிவிருத்தி செய்ய முடியும். இதனால் குடும்ப வருமானத்தை பெருக்க முடியும். இவற்றுள் பனை சார் தொழில்கள், கிடுகு பின்னல், கயிறு திரித்தல், சிறு மனைப்பொருட்கள் உற்பத்தி, உலோகப் பொருட்களை தயாரித்தல், சுருட்டு, பீடி சுற்றல், உடுபுடைவை தயாரித்தல் போன்றன குறிப்பிடத்தக்கன.

மனைப்பொருளாதார மேம்பாட்டுச் செயற்பாட்டில் ஒரு குடும்பம் விவசாயத்தில் மாத்திரம் அல்லது விவசாயம், கால்நடைவளர்ப்பு மற்றும் சிறுதொழில்களில் ஒரே நேரத்தில் ஈடுபடவும் முடியும். இத்திட்டங்களை மேற்கொள்ளும் போது இது தொடர்பான உற்பத்திகள் அதிகரிக்கும். குடும்ப வருமானமும் கூடும்.

மேலும் பொழுதுபோக்கு, உடற்பயிற்சி மற்றும் தனது உற்பத்தி என்ற மனநிறைவும் கிட்டும். வீட்டுச் சூழல் புனிதமாகவும், பசுமையாக இருப்பதுடன் தற்சார்பு பண்பு மேலோங்கி நிற்கும்.

எனவே மக்கள் மனைப்பொருளாதார அபிவிருத்தி முன்னெடுப்பில் பங்குகொண்டு வாழ்வை வளமாக்கலாம். இதற்கு மக்களை சரியான முறையில் அணிதிரட்டுவதுடன், தெளிவான தூரநோக்கு, சிறந்த பணி, நியாயமான இலக்குகள், பொருத்தமான தந்திரோபாயங்கள், சிறந்த வழிகாட்டும் நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படின் திட்ட மிட்ட இலக்குகளையும் விரும் பிய பண்புகளையும் அடைய முடியும்.

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### எதற்காக இப்படி

உறவுகளே நில்லுங்கள்
உங்களோடு சில நிமிடம்
அன்பானவர்களே
நான் வாழும்போது
என்னைப் பார்த்து மனதுக்குள்
பெருமூச்சு விட்டீர்கள்
நான் தாழ்ந்து போகும் போது
ஏன் சிரிக்கின்றீர்கள்
என் வாழ்க்கை
எனக்காக மட்டும் தான்
ஆதலால் தயவு செய்து
என் இதயத்தில்
ஏறி மிதிக்காதீர்

ரீ.அரவிந்தன்
புலோலியூர்

### தவிப்பு

இருமனம் ஒரு மனமானது
திருமணம் நிச்சயமானது
நாட்டில் யுத்தம் ஆரம்பமானது
ஒரு மனத்தை இழந்தேன்
தனிமரமானேன்

க.செல்வமலர்
இடைக்காடு

### போலிகள்

கரைகாணா
ஜனக் கூட்டத்தில்
கதை சொல்லும்
கதாப் பிரசங்கி
அவன்...
வேஷம் கலைந்த
போது தான் தெரிந்தது
அவனும்
வேடதாரியென்பது

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### கொடூரம்

கடந்து வந்த கொடூரங்கள்
கனவாய் எரிகிறது கண்களில்
மறக்க நினைக்கிறோம் ஆனால்
மறக்க முடியாத வடுக்களாய்
வன்னிக் கொடூரம் - எம்
தமிழினத்தின் மனங்களில்
நித்தம் நினைக்க வைத்து
எம் சித்தம் கலங்குகிறது.

க.கலையரசி
துணவி

### அவரவர் பார்வை...

**சம்பளம்**
தாய்ப்பால் குருதியாகி
குருதி வியர்வையாகிய
பிரதி பலன்
**கவிதை**
என் மனம் வித்திட- என்
கரங்கள் விதைப்பது
**நித்திரை**
மரணப் படுக்கைக்கு
சில நிமிட ஒத்திகை
**இமை**
என்னவளின்
கண்மணி வசிக்கும்
வீட்டின் அழகிய
வண்ணத்திரை

செ.வினுஷா
யா/ வட்டு இந்துக் கல்லூரி

### கோலம்

பல வர்ணப்பட்டாடையில்
பளபளத்தாயே -அன்று
பாதையிலே பழுப்பு நிறத்தில்
பரிதவித்தாயே- இன்று
இது தான் மனிதக்கோலமா?

இ.லக்சுயா, சிறுவர் இல்லம்

### கல்வெட்டுக்களாய்

உன்னோடு பழகிய
நாட்களை எண்ணி
எண்ணியே கரைகிறது
என் ஒவ்வொரு பொழுதும்
மறக்க முடியவில்லை
உன்னையும் உன்னோடு
பழகிய நாட்களையும்
என் இதயத்தில் பட்ட உன்
ஞாபகங்களை
அழிப்பதெப்படி
கையில் பட்ட காயமல்ல
ஆறிப்போவதற்கு
உன் ஞாபகம்
கல்லில் செதுக்கிய கவி வரி
காலத்தாலும் அழியாது!
என்னை நீ
கண்ணிர் மழையினால்
நனைத்து சென்றது
நிஜம்
இன்று ஒன்றுமில்லை
என்னிடம் உன்
நினைவை தவிர

மதி
வட்டக்கச்சி

### இமயம் தொட...


ஆலமரங்கள் தன்
விழுதை அகன்று பரப்புகிறதே
அப்படித்தான் நீ
விருட்சமாய் இரு
விழுது பரப்பு
விட்டுக் கொடுக்கப் பழகு
விருட்சங்களை
விழுதுகளையல்ல
அதுவே உன்
அடையாளச் சின்னங்கள்

மாவை. நா.கஜேந்திரா

### புதுவரவு

உன்னைப் பார்த்த பின்பு
என் பெயரை நானே
மறந்து போனேன்
என் பெயரை
எப்படியும் நீயும்
புரிந்து கொண்டாய்
விண்ணைத்தாண்டிய
படம் பார்த்து விட்டு
நான்கு பக்கமும் கிழியலாய்
வந்து நின்றாள்
பாவாடையுடன்
உன் கோல மொழி அழகிலும்
நாணுதே தமிழ்மொழி
அடி பெண்ணே
ஏன் இந்த இடை மொழி

மருதங்கேணியூர்
அகிலேஸ்வரன்



## மௌனத்தின் தேடல் - 66

### ஊழல்

ஆட்சி பீட ஆசைக்காரர்களே
உம் உயர் பதவிகள் யாவும்
காலிழந்த நாற்காலி போன்றதே
கண்விழித்திருக்கும் போதே கவிழலாம்

சு.தமிழினி
சுன்னாகம்

### நிதானம்

உயர நாற்காலி
உட்கார நல்ல இடம் தான்
உயர்த்திவைப்பதற்கு உள்ளனர்
தொண்டர் தான்
உள்ளே உடைவுண்டு அறியாது
உன் நிதானம் தவறி...?

பொ.புனிதன்
வரியப்புலம்

### ஒடிந்தகால் முட்டுக்கட்டை

நாற்காலியில் அமர்ந்தோர்
முக்காலியாய் ஆக்கிவிட்டனர்
தற்காலிகமாய்
இதில் அமர்வதற்கும்
எத்தனைபேரோ என்று
கால் ஒடிந்து நடுவில் நிற்கிறது.

ஜெயம் கிறிஸ்துராசா
வவுனியா

ஏய் மனிதா!
என் மேலா சவாரி
முக்காலிலும் முடியுமா?
முட்டுக்கட்டை தான்
உன் தலை விதி

அ.வசந்தன்
அல்வாய்

### நாற்காலி

அரண்மனைக்குள்ளே
அலங்கார உருவம்
தெரு முனைக்கூட்டத்தின்
வியாபார புருவம்
இன்று அதிகார வர்க்கத்தின்
சுமைதாங்கி வறவம்...!

கே.ரஞ்சித் விஜயகுமார்
யாழ்ப்பாணம்

### மூடம்

சொத்துக்கள்
சொந்தங்களோடு
கால்களையும் இழந்து
முடமாகிப் போனது
நாங்கள் மட்டுமல்ல
கதிரையுந்தான்
கூடக் கிடந்த
குற்றத்துக்காய்

துரை
தென் மட்டுவில்

### நியாயமா

உண்மை என்ற
பொருளின் சின்னம்
நொறுங்கி விடுதல்
முறையன்றோ?

சத்தியப்பிரியா

### பேராசை

மூன்று காலுள்ள நாற்காலியை
முனைந்து பிடிக்கின்றனர்
விட்டால் இவர்கள் முதுகிலே
விழுமென்று தெரிந்தும்

எல். நித்தியா
வல்வெட்டித்துறை

### எதனால்

காக்கப்பட்ட நாற்காலிகள்
தூக்கப்பட்ட போது
தாக்கப்பட்டதோ?
தழும்புகள் தெரிகின்றன

கலட்டியூர்
கஜா

### விதி

யுத்தம் மனிதர்களை
மட்டும் ஊனமாக்கவில்லை
தளபாடங்களையும்
நாசமாக்கி விட்டது

மு.அருமைச்சந்திரன்
கறுக்காய்

### சிறப்பெது

வெண் கொற்றக்
குடையின் கீழ்
ஆட்சிகள் நடக்கின்றது
அது பெரிதல்ல
ஒரு கால் உடைந்த
நாற்காலியின்
மீதிருந்து நடத்தும்
சிறப்பான ஆட்சியே
ஆட்சியின் சிறப்பு

ராஜி
உரும்பிராய்

### என்னதானிருக்கு

நாகரிகம் வளர்ந்து விட்டது
முறிந்தாலென்ன?
உடைந்தாலென்ன?
அது தான் வேணுமென
அடம்பிடிக்கிறீர்களே!

சரண்யா

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் - 67



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 22.04.2011 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# பொன்னர் சங்கர் - மன்னாதி மன்னன்

திரை விமர்சனம்

தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் கதை, திரைக்கதை, வசனத்தில் எத்தனையோ படங்கள் வெளிவந்திருந்தாலும் இத்தனை பிரமாண்டமாய் ஒரு திரைப்படம் வெளி வந்ததில்லை... எனும் அளவில் பராசக்திக்குப் பின் பேசப்படும் படமாக அமைந்துள்ளது பொன்னர் சங்கர்! இதை சில வாரங்களுக்கு முன் இப்படத்தை பார்த்த முதல்வர் கருணாநிதியே உணர்ந்ததால்தான் பொன்னர் சங்கர் ஓடியோ வெளியீட்டு விழாவில், இப்படத்தை இயக்கிய தியாகராஜனின் கைகளில் முத்தமிட வேண்டும்! பொன்னரும் சங்கருமாக நடித்திருக்கும் அவரது மகன் பிரஷாந்தின் கன்னங்களில் முத்தமிட வேண்டும் என்று தேர்தல் பரபரப்பிலும் வந்து அவ் விழாவில் கலந்து கொண்டு உணர்ச்சி பொங்க கருணாநிதி பேசியிருப்பார்போலும்!.



கொங்கு மண்டலத்தின் அண்ணன்மார் கதை என்றும், பொன்னர்-சங்கர் என்றும் இன்னுமும் பேசப்பட்டு வரும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பெருமைமிகு வரலாறுதான் இந் தப்படம்!.

கதைப்படி, குறுநில அரசர்களான அப்பாவும், அண்ணனும் இவன் உனக்குத்தான்! அவனுக்குத்தான் நீ! என சிறு வயது முதல் அடையாளங்காட்டி வளர்த்த அம்மாஞ்சி மாமன் நெல்லையன் கொண்டானை தவிர்த்து திடீரென மாற்றான் மந்தியப்பனுக்கு மாலையிடும்படி இளவரசி அடிபணியாத தாமரையோ, மணந் தால் நெல்லையன் கொண்டான்! இல்லையேல் மரண (தேவன்)ங் கொண்டான் என தன் கருத்தில் பிடிவாதமாக இருக்கிறார். இளவரசர் மந்தியப்பன் கூட்டத்திடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு வேண்டா வெறுப்புடன் தாமரைக்கும், நெல்லை யன் கொண்டானுக்கும் மணம் முடித்து வைத்து அரண்மனையை விட்டுத் துரத்தி அடிக்கின்றனர் கவுண்டர் மன்னர்களான அப்பாவும், அண்ணனும்! அப்பொழுது அம்மாஞ்சி கணவனுடன் சீரும் வேண்டாம்; சிறப்பும் வேண்டாம் எனக் கிளம்பும் தாமரை, அண்ணன் சின்னமலை கொழுந்து கவுண்டரிடம் ஒரு சபதம் போடுகிறாள்! அது என்ன சபதம்? அது எப்படி நிறைவேறியது? அதை எப்படிப் பொன்னரும்- சங்கரும் நிறைவேற்றினார் கள்? அதை நிறைவேற்றும் பொன்னர் -சங்கருக்கும்த தாமரைக்கும் என்ன உறவு? அவர்கள் ஏன் போகிறார்கள் துறவு? எப்படி உறவுக்கு திரும்புகிறார்கள் பிறகு? என்பது உள்ளிட்ட இன்னும் பல வினாக்களுக்கு வித்தியாசமாகவும், விறுவிறுப் பாகவும், பிரமாண்டமாகவும், பிரஷாந்தா(?) கவும் விடையளிக்கிறது பொன்னர் - சங்கர் படத்தின் மீதிக் கதை!

பொன்னரும் - சங்கருமாகிய அண்ணன் - தம்பி பாத்திரங்களில் பொன்னராகவும், சங்கராகவும் சங்க கால தமிழனை, குறுநில மன்னனை, வீராதி வீரனை கண் முன் நிறுத்துகின்றார் பிரஷாந்த். காதல் இளவரசனாக மம்பட்டியானின் மகனாக மரத்தை சுற்றி டூயட் பாடிக் கொண்டிருந்த பிரஷாந்த்தானா இது? வாவ்! ஒவ்வொரு காட்சியிலும் புராண காலத்து போர்வீரனை, குறுநில இளவரசனை இல்லை.... இல்லை.... மன்னாதி மன்னனை நம் கண்முன் நிறுத்துகிறார் பிரஷாந்த். குதியேற்றமானாலும் சரி.... வாள் சண்டையானாலும் சரி.... வெளுத்து வாங்கிவிடுகிறார் மனிதர். சபாஷ்! சபாஷ்!!


பொன்னர் - சங்கர் இருவரது ஜோடியாக முத்தாயி, பவழாயி கரக்டரில் அறிமுகமாகியிருக்கும் பூஜா சோப்ராவையும், திவ்யா பரமேஸ்வரனையும் இயக்குநர் தியாகராஜனால் மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும் எனும் அளவில், படம் முழுக்க தேவதைகளாக மிளிர்கின்றனர் இருவரும்.

கதாநாயகர்களின் தந்தை நெல்லையன் கொண்டானாகவும் இளவரசி தாமரை (குஷ்பு) யின் அம்மாஞ்சி மாமனாகவும் நடிகர் ஜெயராம், நல்லதுக்கு போராடும் மாயவர் மந்திரி கிழவராக நாசர், பெருந்தன்மை மிக்க சோழ அரசனாக பிரபு, மான ரோஷம் நிரம்பிய காளி அரசனாக நெப்போலியன், வில்லன் மந்தியப்பனாக பிரகாஷ் ராஜ், அவரது அப்பாவாக கப்டன் ராஜ், பொன்னர் - சங்கருக்காக தன் வாரிசுகளையும் காவு கொடுத்து மனைவியையும் இழந்து இருவருக்கும் போர் பயிற்சி தரும் ஆசானாக ராஜ்கிரண், சின்னமலை கொழுந்து கவுண்டராக பொன்வண்ணன், அவரது மகன் வையம் பெருமானாக ரியாஸ்கான், கதாநாயகர்களின் நண்பராக போஸ் வெங்கட், இளவரசி குஷ்புவின் மகளாகவும்த கதா நாயர்களின் சகோதரியாகவும் சினேகா மற்றும் கீதா, சீதா, லஷ்மி ராமகிருஷ்ணன், பொன்னம்பலம், பெசன்ட் நகர் ரவி, டெல்லி கணேஷ் உள்ளிட்ட எல்லோருமே பாத்திரத்திற்கேற்ற பளீச் தேர்வு. அவ்வளவு ஏன்? ஒரு பாடலுக்கு பிரமாண்ட முரசு கொட்டும் தாமிரபரணி பானு கூட பளீச் தேர்வுதான்.

எருதுகளை கட்ட ஏர் உழுத படியே பிரமாண்டமாக பொன்னரும் சங்கரும் உறியடிக்கும் ஆரம்ப காட்சியில் தொடங்கி, இராமாயணம், மகாபாரத போர் காட்சிகளையே மிஞ்சும் வகையில் படமாகியிருக்கும் க்ளைமாக்ஸ் போர் காட்சி வரை ஒவ்வொரு சீனும் ரகிகர்களையே அரசர் காலத்திற்கு அழைத்துப் போகும் பிரமாண்டம் என்றால் மிகையல்ல! எல்லோரும் புராணகால தமிழையே பேசியிருந் தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். அவ்வாறு இல்லாதது சிறு குறை!!

இந்த காலத்திற்கு பொருந்தும் கலைஞர் கருணாநிதியின் அரசியல் வசனங்களும், எந்த காலத்திற்கும் பொருந்தும் அந்தப்புரத்து வசனங்களும், வார்த்தை ஜாலங்களும், தியேட்டரில் விசில் பறக்க செய்கிறது.

டி.முத்து ராஜின் கலை - இயக்கம், ஷாஜி குமாரின் ஒளிப்பதிவு, பிரஷாந்தின் பிரமாதமான விஷுவல் எபெக்ட்ஸ், தியாகராஜனின் இயக்கம், எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக இளையராஜாவின் இதமான பதமான இசை என எல்லாமும் சேர்ந்து கலைஞரின் பொன்னர் சங்கரை காண் போரையும் (மனதளவில்), மன்னர் மன்னாதி மன்னர் ஆக்கிய ஆக்கியுள்ளதென்றால் மிகையல்ல.






# போராளி படத்தில் அஞ்சலி



'நாடோடிகள்' படத்திற்கு அடுத்தபடியாக இயக்குநர் சமுத்திரக்கனி 'போராளி' என்ற படத்தை இயக்க இருக்கிறார். இப்படத்தில் நடிகை அஞ்சலி கதா நாயகியாக நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

சுப்பிரமணியபுரம் சசிகுமாரின் நண்பரும் நடிகரும் இயக்குநருமானவர் சமுத்திரக்கனி. சுப்பிரமணியபுரம் படத்தில் சமுத்திரக்கனியை நடிக்க வைத்தார் சசி. அதேபோல் நாடோடிகள் படத்தில் சசிகுமாரை நடிக்க வைத்தார் சமுத்திரக்கனி.

இந்த இரண்டு படங்களும் சுப்பர் ஹிட் ஆனது. இந்த வெற்றியைத் தனது அடுத்த படத்திலும் கொடுக்க நினைத்தார் சசி. அதன்படி தன்னுடைய ஈசன் படத்தில் கம்பீரமான பொலிஸ் அதிகாரியாக நடித்தார் சமுத்திரக்கனி. இப்போது மீண்டும் சமுத்திரக்கனி போராளி என்ற படத்தை எடுக்கவிருக்கிறார். இதில் சசிக்குமார் நடிக்கிறார். படத்தில் சசிக்குமாருக்கு ஜோடியாக சுவாதி, அபிநயா ஆகியோரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வந்தது. இந்நிலையில் அங்காடித்தெரு புகழ் அஞ்சலி இப்படத்தில் நடிக்கவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

# இயக்குநர் ஆகிறார் சிம்ரன்



ஜூன் மாதம் படத் தயாரிப்பில் ஈடுபட இருப்பதாக சிம்ரன் கூறினார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது,

ஜூன்மாதம் இந்திப் படம் ஒன்றை ரீமேக் செய்கிறேன். இதை இயக்குபவர் பற்றி விரைவில் அறிவிப்பேன். அடுத்து நானே படம் இயக்குகிறேன். இதற்கான கதையை உருவாக்கி வருகிறேன். பல கொமர்ஷியல் படங்களில் நடித்ததன் மூலம் ரசிகர்கள் எதை ரசிப்பார்கள் எனத் தெரியும். அதற்கேற்ற வகையில் எழுதி வருகிறேன். விரைவில் தயாரிப்பாளர் சிம்ரனையும் இயக்குநர் சிம்ரனையும் பார்க்கலாம் என்றார்.



# மே 22இல் 'அவன் இவன்'

தேசிய விருது பெற்ற இயக்குநர் பாலா நான் கடவுள் படத்தைத் தொடர்ந்து இயக்கி முடித்திருக்கும் படம் அவன் இவன். இப்படம் மே 22ஆம் திகதி திரைக்கு வர இருக்கிறது.

சேது, நான் கடவுள் உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குநர் பாலா அடுத்து அவன் இவன் என்ற படத்தை இயக்கி இருக்கிறார். இப்படத்தில் ஆர்யாவும், விஷாலும் நடித்திருக்கின்றனர். இவர்களுக்கு ஜோடியாக மதுஷாலினியும், ஜனனி ஐயரும் நடித்திருக்கின்றனர். இந்தப் படத்தில் வித்தியாசமாக விஷால் அரவாணி பாத் திரத்தில் நடிக்க இருக்கிறார். பாலாவின் முந்தைய படங்களைக் காட்டிலும் இந்தப் படம் வித்தியாசமாகவும் முதன்முறையாக கொமர்ஷியலாகவும் இருக்கும் என்று கூறப்படுகிறது. தற்போது சூட்டிங் பணிகள் அனைத்தும் நிறைவடைந்து இறுதிக்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. இப்படத்திற்கு யுவன் சங்கர்ராஜா இசைய மைத்திருக்கிறார். தேர்தலால் இப்படம் தள்ளிப் போனது. இப்போது தேர்தலும் முடிந்து விட்டதால் மே மாதம் 22ஆம் திகதி திரைக்கு வரும் என்று கூறப்படுகிறது.



சுவர்க்கத்திற்கு வெகு தூரத்தில் உள்ளது பூமி.
பூமிக்கு வெகு சமீபத்தில் உள்ளது சுவர்க்கம்.
- ஹேர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## திருமறைக் கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சி...

யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் கலைப் படைப்பின் கலாபீடம். யாழ்.மண்ணில் இசையும், கலையும், நாடகமும் உயிர் வாழ்வதற்கு அதன் பங்கும் பணியும் காத்திரமானவை.

திருமறைக் கலாமன்றத்தின் படைப்புகள் தனித்துவமானவை. தவக்காலத்தின் இறுதிக் காலப்பகுதியில் திருப்பாடுகளின் காட்சியை அவர்கள் அரங்கேற்றுவர்.

நேற்றைய தினம் திருப்பாடுகளின் காட்சியைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. குறித்த நேரத்தில் ஆரம்பிக்கப்பட்ட அந்தக் காட்சி, ஒன்றே முக்கால் மணித்தியாலங்கள் நீடித்தன.

ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் என ஏராளமானோர் அந்தக் காட்சியைக் கண்டுகளித்தனர்.

சபை முழுவதும் நிசப்தம். இசையின் கானம், நடிப்பின் வீச்சு, ஒலி, ஒளி அமைப்பு என்ற அத்தனையும் சேர்ந்து அற்புதமான படைப்பாக அமைந்திருந்தன.

ஒரு பெரும் வரலாற்றை, தெய்வீக பேருண்மையை, ஒன்றேமுக்கால் மணித்தியாலங்களில் பார்வையாளர்களை மனங்கொள்ள வைத்த அந்த அற்புதப் பாத்திரங்கள், தமிழகத்தின் நடிப்பாற்றலை விஞ்சிவிட்டன என்றே சொல்ல வேண்டும்.

தமிழ் உச்சரிப்புத் தெளிவும், உணர்வுபூர்வமான நடிப்பும், தெய்வீகத்தைத் தூண்டும் இசையும் இணைந்த அந்த திருப்பாடுகளின் காட்சி அஞ்ஞானம் அகற்றவல்லது.


இந்தக் காட்சியை அனைவரும் பார்க்க வேண்டுமென்பது நம் வேண்டுதல். அந்த வேண்டுதலுக்காகவே இந்த இடத்தில் திருப்பாடுகளின் காட்சியை எழுத விளைந்தோம்.

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் அருட்திரு மரியசேவியர் அடிகளாரின் அர்ப்பணிப்பு நிறைந்த கலைப்பணிக்கு, திருப்பாடுகளின் காட்சி மகுடம் சூட்டுவது போன்றதாகும்.

ஓம் என்ற ஓங்காரத்தின் வடிவமான பிரபஞ்சம் என்பதுதான் திருப்பாடுகளின் காட்சியின் முதல் வாசகம். அந்த வாசகத்தை செவிமடுத்ததும் அதிர்ந்து போனேன். ஓ! சைவ சித்தாந்தத்தில் ஊறித்திளைத்த மரியசேவியர் அடிகளாரின் சமயம் கடந்த மெய்ஞானத்தின் படைப்புத்தான் அது என்பதை உணர்ந்தபோது நெக்குருகிப் போனோம்.

சமய சிந்தனைகள், இறை நம்பிக்கைகளை இப்படி எடுத்துரைத்தால், அவை நிச்சயம் எங்கள் இளம் சமூகத்தை ஆற்றுப்படுத்தும் என்ற நம்பிக்கையோடு திருமறைக் கலாமன்றத்தின் தெய்வீகமான கலைப்பணி எங்கும், எதிலும் வியாபகம் பெறட்டும். பிதாமகன் அதற்கு அருள் புரிவாராக.

# "ஆயிரம் பானை வைத்துப் பொங்குவோம் அம்பாளின் அருளை அனைவரும் பெறுவோம்"



இரணைமடு அருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில் வருடாந்தப் பொங்கல் இன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்து சித்தர்பரம்பரையின் தவமுதல்வர் யோகர் சுவாமிகள் அம்பாளுடைய தீர்த்தமான இரணைமடுக்குள நீரைப்பயன்படுத்தும் மக்களுக்கு "அம்பாளுக்கு ஆயிரம் பானை வைத்துப் பொங்குங்கள்'' என்று அருள்வாக்கில் தெரிவித்தார்.

இதைத் தேவவாக்காக எடுத்த கிளிநொச்சி வாழ் மக்கள் ஆண்டுதோறும் சித்திரைப் பூரணையின் போது மாலை வேளையில் அம்பாளுக்குப் பொங்குவதிலேயே சுகங்கண்டனர். 1961 ஆம் ஆண்டு அம்பாளின் திருமுழுக்குக்குப் பின் தொடர்ந்து பொங்கலைச் சிறப்பாகச் செய்துவருகின்றனர். பங்குனி மாதத்தில் ஊர் தோறும் உலாப்போகும் போது அடியார்களால் பொங்கல் மக்களுக்கு நினைவூட்டப்படுகின்றது. இதனால் ஆண்டுக்கு ஆண்டு பொங்கல் பானைகள் கூடின. இது ஆதியில் ஒரு மரத்தடியில் நடந்து வந்த பொங்கலின் தொடர்பு என்பதை மக்கள் அறிவர்.

இரணைமடுக்குள நீர் ஊர் ஊராக பாய்வதால் வாழ்வும் வளமும் பெறும் மக்கள் பல்வேறு தேவைகளுக்காக பயிர்வளம் செழிக்க வேண்டும். பால் வளம் பெருக வேண்டும் போன்ற நேர்த்திகளை வைத்து பொங்கலை நிறைவு செய்கின்றனர். இதேபோன்று கும்ப தீர்த்தம் எடுக்கும் பெண்கள் எண்ணிய திருமணம் நடக்க வேண்டும். மகப்பேறு சுகமாக நிகழ வேண்டும். தீராத நோய் தீர வேண்டும். வறுமை ஒழிய வேண்டும். பிள்ளைகளின் கல்வி மேம்பாடு அடைய வேண்டும் என்று பல்வேறு நேர்த்திகளை வைத்து கும்ப தீர்த்தம் எடுக்கின்றனர். இவர்களின் தொகையும் ஆண்டு தோறும் பெருகியே வருகின்றது.

பொங்கல் பொங்குவோர் தங்கள் களனியில் விளையும் நெல்லை தங்கள் கைகளாலே குற்றிச் சுத்தம் செய்த அரிசியை பலர் வெண்பொங்கலாகவே பொங்குவர். சிலர் சர்க்கரைப் பொங்கல் பொங்குவர். எல்லாப் பொங்கலும் மணம் பரப்பி மகிழ்வூட்டும். மக்களும் மனநிறைவு பெறுவர்.

ஊரங்குச்சட்டநடைமுறை, இடப்பெயர்வுகள் போன்றவற்றால் மூன்று குடும்பங்கள் வழந்துப் பானை பொங்குகின்ற நிலைமை உருவானது. பொங்கல்களுக்கும் கும்பத்தீர்த்தம் எடுப்பதற்கும் இரணைமடுக்குள நீரே பயன்படுத்தப்படுகிறது. இந்நிகழ்வு பாரம்பரிய பண்பாட்டுக் கோலங்களுடனேயே நடைபெற்று வருகின்றது. இம்முறை மூத்த சிவாச்சாரியார்களின் அறிவுறுத்தலின் படியும், ஆய்வாளர்களின் ஆலோசனைப்படியும் பொங்கல் நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வழமை போல மாவட்டத்தின் பல இடங்களில் இருந்தும் பிற மாவட்டங்களில் இருந்தும் பேருந்து சேவைகள் நடைபெறவுள்ளது. காவடிகள் எடுக்க நேர்த்தி உள்ளவர்கள் காவடி எடுத்து வர அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்

**இரணைமடு அருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில் வருடாந்தப் பொங்கல் இன்றாகும்.**

நாட்டத்துடன் திருவிழா நடைபெறும். களிலும் அம்பாளின் திருவுளப்படி தீர்த்த

**அறங்காவலர் அவை, இரணைமடு.**

திருவிழா அன்று இரவு பொங்கல் சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது.

## தேர்ச்சில்லினுள் அகப்பட்டு 3 வயதுச் சிறுவன் படுகாயம்

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசாமி கோவில் தேர்த்திருவிழாவின் போது மூன்று வயதுச் சிறுவனின் கால் தேர்ச்சில்லில் அகப்பட்டதில் படுகாயமடைந்த நிலையில் அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் மூளாயைச் சேர்ந்த விஸ்வநாதன் சிவகரன் (வயது 3) என்ற சிறுவனே கால் முறிந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, நேற்றைய தினம் இடம்பெற்ற தேர்த்திருவிழாவின் போது சண்டேஸ்வரர் தேரினைச் சிறுவர்கள் இணைந்து இழுத்து வந்த போது தடக்கி விழுந்ததன் காரணமாகவே இவ்வாறு கால்முறிவு ஏற்பட்டுள்ளது. (ச-6)


## குருத்து ஞாயிறைக் கொண்டாடும் நாம் வாழ்வின் பெரிய வெள்ளிகளை வலிமையோடு சந்திப்போம் (மத்தேயு 26:14-27:66)

குருத்தோலைகளும், ஒலிவக் கிளைகளும் வெற்றிக்கு அடையாளம். வார்த்தையாகி மனிதனாக வந்த இறைமகனுடைய பாடுகளின் ஞாயிறு குருத்தோலைகளால் குறிக்கப்படுகிறது. பாடுகளின் பலனாக அன்றோ வெற்றி கிடைத்தது. இறையரசை நிலைநாட்ட தம்பேச்சாலும் செயலாலும் வாழ்வாலும் இதுவரை போரடிய இயேசு தம்பாடுகளும் மரணமும் அடங்கிய இறுதிக் கட்ட போரட்டத்தில் வரலாறு எழுத இறங்கி விட்டார். தன் உடலைக் கிழித்துப் பலியாக்கி வேதனை உணர்வுகளைப் பாடுகளாக்கி மனிதனுக்கு முழு விடுதலை பெற்றுத்தந்தார். இப்பாடுகளின் ஞாயிறு வெற்றியின் ஞாயிறு.

இறைமகன் இயேசு இவ்வுலகில் பிறந்தபோது கிழக்கில் இருந்து ஞானிகள் எருசலேமிற்கு வந்து யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? (மத் 2:2) என்று விசாரித்தார்கள். அவ்வாறே கழுதைமேல் ஏறி எருசலேமிற்குள் இறைமகன் இயேசு நுழைகையில் அங்கே அனைவரும் ஆச்சரியப்பட்டு இவர் யார்? என்று விசாரித்தார்கள். இயேசுவின் நற்செய்திப் பணிக்காலம் இறுதிக் கட்டத்தைநெருங்குகிறது. இன்று இயேசு 'எருசலேம்' நகருக்குள் நுழைகின்றார். எருசலேம் என்பது இறைவன் வாழும் இடம். கடவுளின் மாட்சியும் மகிமையும் தங்கியுள்ள இடம். குருத்தோலைகள் ஒருமைப்பாட்டிற்கும் அடையாளமாகும். குருத்தோலைகளைப் பிடித்து ஓசான்னா பாடி ஆர்ப்பரித்துக் கொண்டு இயேசுவோடு மக்கள் கூட்டம் சென்றது. இது இன்றுபோல் அரசு ஏற்பாடு செய்த அகிலத்திற்கு காட்டும் விழா அல்ல. மக்களே தாமாக ஆண்டவர் இயேசுவுக்கு அளித்த ஓசன்னா வரவேற்பு.

இன்றைய நற்செய்தி "இயேசுவின் திருப்பாடுகள் பற்றிய வரலாறு'' இயேசுவுக்குப் பிறர் கொடுத்த இகழ்ச்சிகளை, அவமானங்களைச் சுட்டிக்காட்டுகிறது. 'தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்குத அதுவும் சிலுவைச்சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்(பிலி 2:7-8)'' 'இகழ்ச்சியும் தாழ்ச்சியும்' இங்கு இயேசுவின் இந்த இறுதிக்கட்ட போராட்டத்திலும் அரங்கேறுகின்றது. நாம் இகழ்ச்சியை தாழ்ச்சியாக ஏற்க வேண்டும். தாழ்ச்சியை இகழ்ச்சியாக எண்ணக்கூடாது. தாழ்ச்சி இகழ்ச்சி அல்ல. இகழ்ச்சி தாழ்ச்சி எனலாம். இகழ்ச்சியாகப் பிறர் தந்தவற்றையெல்லாம் தாழ்ச்சியாக இயேசு ஏற்றுக்கொள்கிறார். 'என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும் போது நீங்கள் பேறு பெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். இவ்வாறே உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள்'' (மத் 5:11-12.) எனவே பிறர் எம்மை இகழ்ச்சிக்குள்ளாக்கும் பொழுது நாம் எம்மைத் தாழ்ச்சிக்குள்ளாக்க வேண்டும்.

எனவே நாமும் எம்வாழ்வில் ஆணவம், அகங்காரம், தற்பெருமை எம்மை ஆட்கொள்ளும் போது எம்மை விட உயர்ந்தவர் யாரும் இல்லை என்ற



இறுமாப்பு அடைகின்றோம். நாம் யார்? கடவுளால் அவர் சாயலாகப் படைக்கப்பட்டவர். இயேசுவைப் போல் சாந்தமுள்ளவராய் மாறுவோம். மன்னிப்புத் தருவதில் வள்ளலிடம் எம்மை ஒப்புக் கொடுத்தவர்களாய் புனித வாரத்திற்குள் நுழைந்திடுவோம். இந்த வாரம் முழுவதும் நாம் இயேசுவோடு விருந்துண்டு, அவரோடு விழித்திருந்து, அவர் முகத்தைத்துடைத்து, அவர் சிலுவை

**பரமபிதா காட்டிய பாதை**

யைச் சுமந்து, அவருக்கு ஆறுதல் கூறி, அவர் மரணம் வரை அவரை விட்டு விலகாதிருப்போம். ஓலைக் குருத்

**ம. பிரான்சிஸ், கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

தை உயர்த்திப்பிடிப்பது போல் தாழ்ச்சிக் கருத்தை நெஞ்சில் ஏந்துவோம். உயிர்த்த கிறிஸ்துவில் நாம் உண்மை மகிழ்வுபெற நம்மைத் தயார் செய்து கொள்வோம்.

# சித்திரைப் பூரணையும் சித்திரகுப்த வழிபாடும்

எமது ஆன்றோர் வகுத்த அறுபது வருடச் சுற்றில் சித்திரை மாதம் முதல் மாதமாகவும் இராசிச்சக்கரத்தில் முதல் இராசியான மேட ராசியைக் கொண்டதாகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இந்த சித்திரை மாதத்திலேயே பிரம்மா பிரபஞ்சத்தைப் படைத்ததாகவும் சித்திரை மாதத்துப் பௌர்ணமியும் சித்திரை நட்சத்திரமும் கூடிய நன்நாளில் இப் பிரபஞ்சத்தில் வாழும் மக்களுடைய நல்வினை தீவினைக்கேற்ப பாவ புண்ணியங்களைக் கணக்கிட்டு நீதி வழங்கவென எம்பிரானான சிவ பெருமானால் சித்திர ரூபமாகச் சித்திர குப்தர் படைக்கப்பட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன.

எனவேதான் சிறப்பான சித்திரா பூரணைத் தினத்தில் மக்கள் முதலில் தம் தாய்வழியினருக்குப் பிதிர்க்கடன் வழிபாடு செய்வதுடன் சித்திரகுப்த நாயனார் கதை படித்தும் கேட்டும் ஆலயங்களில் இறைவழிபாடுகள் செய்வதுடன் சித்திரைக்கஞ்சி காய்ச்சி ஊராரோடு ஒன்றுபட்டு தாம் தாம் செய்த வினைகள் நீங்கத் தான தர்ம வழிபாடுகள் செய்கின்றார்கள்.

இறைவனால் சித்திரத்திற்தோற்றுவிக்கப் பெற்ற சித்திரகுப்தரும் இறையருளாலே வேண்டும் வல்லமைகள் பெற்றவராக உலக ஆன்மாக்களின் வினைகளைக் கணக்கிட்டு அவரவருக்கு ஏற்ப நல்வினை தீவினைக்கான நன்மை தீமைகளை அனுபவிக்கச் செய்யும்படி வேண்டினார்.

## இன்று சித்திரா பௌர்ணமி விரதம்

திருவிளையாடல் புராணத்திலே தேவருக்கரசனான இந்திர மகாராசா பூமியில் வந்து சிவபூசை வழிபாடுகள் செய்து மீண்டும் இந்திரலோகம் சென்ற நன்நாளாகவும் சித்திரா பௌர்ணமி தினம் சிறப்பிக்கப்படுகின்றது.

சித்திர குப்த நாயனார் கதையிலே மண்ணுலக மாந்தர் பலர் தாம் தாம் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப பெற்ற பல்வேறு பலாபலன்களையும் இன்ப துன்பங்களையும் எடுத்துக் கூறி நமக்கு நன்னெறிச் சிறப்பை அறிவுறுத்துகின்றது.

சிறப்புமிக்கதான இந்த சித்திரா பௌர்ணமி சித்திரகுப்த விரதத்தினை வழிபாடுகள் செய்து விரதம் அனுஷ்ட்டித்து அறப்பணி செய்த பலனாக இந்திரனும் இந்திராணியும் புத்திர பாக்கியம் பெற்றதாகவும் அமராவதி எனும் அம்மையார் இவ்விரதத்தினை உதாசீனம் செய்ததாற் பெருந்துன்பங்களுக்கு ஆளானதாகவும் சித்திர குப்த நாயனார் கதையிலே எடுத்துக் கூறப்பட்டிருப்பதை காணலாம்.

நல்லன செய்யவும் நல்லன சிந்திக்கவும் நமக்கு வழிகாட்டும் இத்தகு கதைகளையும் திரு நாட்களையும் மனதிற் கொண்டு நல்வாழ்வு வாழ்வதுடன் பிறர்க்கும் நலம் பயக்கக் கூடியதாக இந்நாட்களை சிறப்பித்து எமது பண்பாடுகள் கலாசாரங்கள் மேலோங்க வழிசெய்வோமாக.

நீர்வைமணி

# தேர்த்திருவிழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

(ஸ்ரீ-3-10)

# உஷ்ணமான காலநிலை மே மாதம் வரை நீடிக்கும்

(கொழும்பு)

உஷ்ணமான காலநிலை மே மாதம் வரை நீடிக்கும் என வளிமண்டல வியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு நேராக உச்சம் கொடுத்து வந்த சூரியன் நகர்ந்துள்ள போதிலும் சூரிய வெப்பத்தின் தாக்கம் தொடர்ந்தும் நீடிப்பதே இதற்குக் காரணமாகும் என்று திணைக்களத்தின் விசேட வானிலை நிபுணர் சமிந்த டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இம் மாதம் 5 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை சூரியன் இலங்கைக்கு நேராக உச்சம் கொடுத்து வந்ததாக விசேட வானிலை நிபுணர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய மாதங்களில் அதிக உஷ்ணம் நிலவுகின்றமையால் இம்மாத இறுதி வரை இந்த காலநிலை நீடிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

மேமாதம் முதல் நிலவுகின்ற உஷ்ணமான காலநிலையில் மாற்றத்தை எதிர்பார்க்க முடியும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# நிபுணர் குழுவின் அறிக்கையை எதிர்ப்பதாயின் பொன்சேகாவை விடுதலை செய்யுங்கள்

## எதிர்க்கட்சி கோரிக்கை

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டுமாயின் சிறையிலிருந்து சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டுமாயின் அதனை நியாயப்படுத்தும் வகையில் சிறை வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு எதிர்கட்சியின் முக்கிய எம்.பி.க்கள் பலர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் ஜனநாயகத்தைப் பாதுகாத்தல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக சில ஆலோசனைகளையும் அவர்கள் தங்களது நிபந்தனைகளாக முன்வைத்துள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கை தொடர்பில் இதுவரை பதிலெதுவும் அளிக்காத போதிலும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவோ சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் விடயத்தில் எந்தவித அழுத்தங்களுக்கும் அடிபணியத் தயாராக இல்லையென்ற கடும் நிலைப்பாட்டில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ஸ்ரீ-2)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இருபாலை வீதியில் கோண்டாவில் கிழக்கு கோண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் சங்க எதிர்கால வளர்ச்சி கருதியும் கலந்து ரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா சங்க அங்கத்தவர்களை சந்திக்க வுள்ளதால் அனைவரையும் தவறாது சமுக மளிக்குமாறு பொது முகாமையாளர் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவுக்கு எதிராக காங்கிரசார் போர்க்கொடி

## புதிய தலைவரை நியமிக்க கோரிக்கை

(சென்னை)

தமிழக சட்டசபை தேர்தலில் தி.மு.க கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரஸ் கட்சி 63 தொகுதிகளில் போட்டியிட்டது.

காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டதில் இருந்தே தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவுக்கு கட்சியில் கடும் எதிர்ப்பு கிளம்பியது.

அவருக்கு எதிராக போாக்கொடி தூக்கிய காங்கிரசார் பல்வேறு இடங்களில் உருவ பொம்மை எரிப்பு போன்ற ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். பல தொகுதிகளில் போட்டி வேட்பாளர்கள் களம் இறங்கினார்கள்.

இந்த நிலையில் தேர்தல் முடிந்ததும் தமிழக காங்கிரஸ் தலைவர் கே.வி.தங்கபாலு கட்சியின் நிர்வாகிகளான கராத்தே தியாகராஜன், எஸ்.வி. சேகர், தென் சென்னை மாவட்ட தலைவர் மங்கள்ராஜ் உட்பட 19 பேரை கட்சியில் இருந்து அதிரடியாக நீக்கினார்.

இது காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. கட்சியின் பல்வேறு பிரிவு நிர்வாகிகள் இந்த நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்து தங்கபாலுவுக்கு எதிராக மீண்டும் போர்க்கொடி தூக்கி உள்ளனர். சென்னை உட்பட சில இடங்களில் தங்கபாலுவுக்கு எதிராக உருவ பொம்மை எரிப்பு போன்ற போராட்டங்கள் நடைபெற்றன.

அகில இந்திய காங்கிரஸ் குழு உறுப்பினர் கார்த்தி ப.சிதரம்பரம், டில்லியில் உள்ள மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு தமிழக காங்கிரஸ் குழுவின் நடவடிக்கை குறித்து தகவல் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து கடந்த 14 ஆம் திகதி இரவு 8 மணிக்கு மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் காங் கிரஸ் தலைவர் சோனியா காந்தியை சந்தித்து பேசினார்.

தமிழக காங்கிரஸ் தலைமை எடுத்துள்ள நடவடிக்கை பற்றியும் அதனால் தொண்டர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கடுமையான எதிர்ப்பு குறித்தும் சோனியாவிடம் ப.சிதரம்பரம் விளக்கி கூறியதாக எதிர்ப்பாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தங்கபாலுவின் நடவடிக்கைக்கு முன்னாள் மத்திய அமைச்சர் இளங்கோவனும் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது,

மேலிடத்தின் அனுமதியின்றி தன்னிச்சையாக தங்கபாலு 19 பேரை நீக்கி யுள்ளார். அதற்கான அதிகாரம் அவருக்கு கிடையாது. கட்சி விரோதமாக செயற்பட்டதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் மைலாப்பூரில் குறுக்கு வழியில் வேட்பாளரான தங்கபாலு மீது தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

(ஸ்ரீ-2)

# வாக்கெண்ணும் மையங்களில் பாதுகாப்பை மேலும் அதிகரிக்குமாறு கோரிக்கை

வாக்கு பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணிக்கை மையங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இங்கு கூடுதல் பாதுகாப்பு வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

மார்க்சிஸ்டு கம்யூனிஸ் கட்சி மாநில செயலாளர் இராமகிருஷ்ணன் தமிழக தலைமைச் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,


கடந்த 13ஆம் திகதி நடந்து முடிந்த தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஒருசில அசம்பாவிதங்கள் தவிர பொதுவாக அமைதியாகவும், சுதந்திரமாகவும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

வாக்குப்பதிவு முடிந்துள்ள போதிலும், வாக்கு எண்ணிக்கை மே 13 அன்றுதான் நடைபெறவுள்ளது. அதுவரை வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு இயந்திரங்களை பாதுகாப்பாக வைத்திருப்பது தேர்தல் ஆணையகத்தின் கடமையாகும்.

தற்போது வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு இயந்திரங்கள் தமிழகத்தின் பல்வேறு மையங்களில் தமிழக பொலிஸாரின் பொறுப்பில் மட்டுமே வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் தி.மு.க ஆட்சியின்போது நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல், கூட்டுறவுத் தேர்தல், சட்டப்பேரவைக்கான இடைத் தேர்தல், மக்களவைக்கான பொதுத் தேர்தல் ஆகியவற்றின்போது நடந்த சில தில்லு முல்லுகளுக்கு தமிழக பொலிஸ் இணக்க மாக இருந்துள்ளது. எனவே, இதனை கருத் தில் கொண்டுஅனை த்து மையங்களிலும் தமிழக பொலிஸ் துறையினரோடு கூடுதலாக மத்திய மேலதிக படையினரையும் பணியில்மர்த்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம் என அதில் கூறப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# இலங்கை கிரிக்கெட் சபையை சாடுகிறார் முத்தையா முரளிதரன்



இங்கிலாந்து சுற்றுலாவுக்காக இந்தியன் பிரிமியர் லீக் போட்டிகளை (ஐ.பி.எல்) இடையில் கைவிட்டு தாயகம் திரும்ப வேண்டுமென இலங்கை வீரர்களை இலங்கைக் கிரிக்கெட் சபை வலியுறுத்தியுள்ளதை முத்தையா முரளிதரன் குறை கூறியுள்ளார்.

தற்போது சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுவிட்ட முரளிதரனும் ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக அவர் கூறுகையில்,

வீரர்களுக்கு மே 20ஆம் திகதிவரை (ஐ.பி.எல் போட்டிகளில்) விளையாட அனுமதி வழங்கப்பட்டது என நான் எண்ணுகின்றேன். திடீரென இடையில் என்ன நடந்தது என எனக்குத் தெரியவில்லை. இது இலங்கை கிரிக்கெட் சபையின் குற்றமாகும்.ஏனெனில் வீரர்கள் மே 20ஆம் திகதிவரை விளையாடுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நிலையில் அவர்கள் அதை மே5ஆம் திகதிக்கு மாற்றுவது தவறாகும்.


மே 5ஆம் திகதி ஐ.பி.எல். போட்டிகளை இடையில் கைவிட்டு திரும்பினால் வீரர்களின் மனோதிடம் பாதிக்கப்படும். இலங்கை கிரிக்கெட் இதை ஆரம்பத்திலேயே அறிவித்திருக்க வேண்டும். அப்போது ஐ.பி.எல். அணிகளும் ஏனையோரும் புரிந்து கொண்டிருப்பர் என முரளிதரன் கூறியுள்ளார்.

இவ்விவகாரம் காரணமாக இரு நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்கிடையில் எதிர்ப்பு நிலை ஏற்படலாம்.இந்திய கிரிக்கெட் சபையை பகைத்துக் கொண்டால் இலங்கை கிரிக்கெட்டிற்கு பெரும் நிதியிழப்பு ஏற்படலாம். ஏனெனில் இலங்கைக்கு இந்தியா சுற்றுலா மேற்கொள்ளும்போது அது மிக முக்கியமானதாகும் எனவும் அவர் கூறியுள்ளார்.இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவும் பாதிக்கப்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ணப் போட்டிகளின் பின்னர் நாம் 25மில்லியன் டொலர் கடனைக் கொண்டுள்ளோம். இந்தியாவை பகைத்துக்கொள்ளக் கூடாது. ஏனெனில் இந்திய அணி வரும் போதுதான் எமக்குப் பணம் கிடைக்கும்.

இப்பிரச்சினை தீர்க்கப்படக்கூடும்.இரு நாடுகளுக்கும் இடையில் இந்த மாதிரி விடயங்கள் இடம்பெற்றுள்ளன.ஆனால் இறுதியில் நாம் இந்தியாவில் தங்கியிருக்க நேரிட்டது. என்ன நடக்கும் என எனக்குத் தெரியவில்லை என முரளிதரன் தெரிவித்துள்ளார்.

# 21 ஓட்டங்களால் பெங்களூரை வீழ்த்தியது சென்னை சுப்பர் கிங்ஸ்



(சென்னை)

ராண்டீவ், அஸ்வின் ஆகியோரின் அபார பந்துவீச்சால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வென்றது.

சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் நேற்று நடந்த 14-து ஐ.பி.எல். லீக் போட்டியில் முதலில் ஆடிய சென்னை அணி 183 ஓட்டங்களை எடுத்தது. 184 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய றோயல் சலஞ்ஜர்ஸ் அணி, திலகரட்ண டில்சானை முதல் பந்திலும் அதன்பிறகு அதிரடியாக ஆடி ஐந்து பந்துகளில் 14 ஓட்டங்களைக் குவித்த பதானை 2ஆவது ஓவரிலும் இழந்தது. நிலைத்து நின்று ஓட்டங்களை எடுக்க முயன்ற அகர்வால் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையிழந்த நிலையிலேயே அதன் வெற்றிக் கனவு சரிந்தது.

ஆனால், விராட் கோலியும் டி வில்லியர்ஸும் மிக அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். 5 ஓவர்களில் இவர்கள் இருவரும் 52 ஓட்டங்களைக் குவித்தனர். 28 பந்துகளில் 4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 35 ஓட்டங்களை எடுத்திருந்த கோலி ஆட்டமிழந்தார்.

ஒரு முனையில் டி வில்லியர்ஸ் ஓட்டங்களைக் குவிக்க மறுமுனையில் விக்கெட்டுகள் விழுந்த வண்ணம் இருந்தன. 19ஆவது ஓவரில் டி வில்லியர்ஸ் ஆட்டமிழக்க தோல்வி உறுதியானது. டி வில்லியர்ஸ் 44 பந்துகளுக்கு முகம்கொடுத்து 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 64 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 162 ஓட்டங்களை மட்டுமே பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி பெற்றது. சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# பத்தாயிரக் கணக்கான மக்கள்...

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களை விசாரணை செய்வதற்கு சுயாதீனமான சர்வதேச பொறிமுறையை உருவாக்க வேண்டும் என்று நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் தான் மேற்கொண்ட மனிதாபிமானப் போரில் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனக் கூறியுள்ள போதிலும், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமைச் சட்டங்களை மீறும் வகையில் போரில் ஈடுபட்ட இரு தரப்பினரும் பாரதூரமான குற்றச்செயல்களை மேற்கொண்டுள்ளதாக நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சர்வதேச போர் நியமங்களுக்கு மாறாக மேற்கொள்ளப்பட்ட இச் சம்பவங்கள் போர் குற்றங்களாகவும் மானுடத்திற்கு எதிரான குற்றங்களாகவும் கருதப்படக்கூடியவை என இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தோனேசிய முன்னாள் சட்டமா அதிபர் மர்சூதி தாருகஸ்மன் தலைமையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு 196 பக்கங்களைக் கொண்ட தனது அறிக்கையை கடந்த மாதம் 31ஆம் திகதி தயாரித்து முடித்துள்ளது.

இதேவேளை அரசாங்கத்திற்கு கையளிப்பதற்காக இவ்வறிக்கையின் நகல் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவிடம் கையளிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கை இதுவரை உத்தியோகபூர்வமாக பகிரங்கப்படுத்தப்படாத நிலையில் அதன் ஒரு பகுதியை கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது. நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் இவ்வூடகத் தில் தெரிவிக்கப்பட்ட முக்கியமான விடயங்கள் இங்கு வருமாறு;

### புலிகள் மக்களைத் தடுத்து வைத்தனர்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவை நிராகரித்துள்ள இவ்வறிக்கை போரில் ஈடுபட்ட இருதரப்பினரும் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து இலங்கை அரசாங்கம் நீதியான விசாரணைகளை முன்னெடுக்க ஒத்துழைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பொதுமக்களை தடுத்து வைத்திருந்தமை மற்றும் அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற பொதுமக்களைத் தண்டித்தமை தொடர்பில் இவ்வறிக்கை குற்றம் சுமத்தியுள்ளது.

### ஏராளமானோர் கொல்லப்பட்டனர்

2008ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் படைத்தரப்பினர் வன்னிப் பிராந்தியத்தில் முன்னேறிச் செல்கின்ற வேளையில் மேற்கொண்ட கடுமையான எறிகணைத் தாக்குதல்களால் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

வன்னிப் பிராந்தியத்தில் அறிவிக்கப்பட்ட மூன்று தாக்குதல் தவிர்ப்பு வலயங்களின் மீது அரசாங்கம் கனரக ஆயுதங்களின் மூலம் கடுமையான பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது.

வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் படைத்தரப்பினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதல்களே பொதுமக்களின் பெரும்பாலான இழப்புகளுக்கு காரணமாக அமைந்துள்ளதுடன் வைத்தியசாலை மீதும் படைத்தரப்பினர் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

### வைத்தியசாலைகள் தாக்கப்பட்டன

வன்னிப் பிராந்தியத்தில் அமைந்திருந்த எல்லா வைத்தியசாலைகளும் மோட்டார் மற்றும் ஆட்லறி போன்ற பீரங்கிகளால் தாக்கப்பட்டுள்ளன.

2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையிலான காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் கொல்லப்பட்டதுடன் வன்னிப் போரின் இறுதி நாட்களில் அடையாளம் காணப்படாமல் பெருமளவானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

### புலிப் போராளிகள் காணாமற் போயுள்ளனர்

போரின் முடிவில் விடுதலைப் புலிகளின் போராளிகள் தனியாக அழைத்துச் செல்லப்பட்டு அவர்களில் பலர் கொல்லப்பட்டனர். பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கக் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. பெரும்பாலானோர் காணாமற் போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

போரின்போது இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் அம்மக்களின் அடிப்படையான சமூக பொருளாதார உரிமைகள் மீறப்பட்டன.இவர்களில் பலர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதுடன் அனாவசியமாகப் பலர் உயிரிழந்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கு அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு அவர்கள் வெளியுலகுடன் தொடர்பு கொள்வது மறுக்கப்பட்டது.

போரின் போது முன்னேறிய படைத்தரப்பினரின் நகர்வுகளைத் தடுக்க தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியுள்ளதுடன், கட்டாய ஆட்சேர்ப்பை நடைமுறைப்படுத்தி சிறுவர்களைத் தம்முடன் இணைத்துக்கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் அரசாங்கத்தின் மீது ஐந்து குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரசினால் ஐந்து

★ பரந்தளவிலான பீரங்கித் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைப் படுகொலை செய்தமை.

★ மனிதாபிமான இலக்குகள், வைத்தியசாலைகள் மீது பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டமை.

★ பொதுமக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதைத் தடுத்தமை.

★ போரினால் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் போராளிகளின் அடிப்படை உரிமைகளை மீறியமை.

★ போர் இடம்பெற்ற பகுதிகளுக்கு வெளியே ஊடகங்கள் மற்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை விமர்சித்தவர்கள் மீது அடக்கு முறையைப் பிரயோகித்தமை.

### புலிகளால் ஆறு

அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆறு குற்றச்சாட்டுகளை நிபுணர் குழு முன்வைத்துள்ளது.

★ பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை.

★ தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து தப்பிச் செல்ல முயன்றவர்கள் மீது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

★ பொதுமக்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளில் இருந்து தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

★ சிறுவர்களைக் கட்டாயமாக இயக்கத்தில் சேர்த்துக் கொண்டமை.

★ பொதுமக்களை நிர்ப்பந்தித்து வேலை வாங்கியமை.

★ போர் நடைபெறாத காலப்பகுதிகளில் தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைக் கொன்றமை.

இக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இச்சம்பவங்களுக்குப் பொறுப்பான அனைவரையும் நீதியின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையின் படி உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவகையில் அமையவில்லை.

### ஐ.நா.அமைப்புகள் தவறிவிட்டன

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள் தவறிவிட்டன.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை அரசாங்கமும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நிபுணர்கள் குழு தனது பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

போரில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான விசாரணைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் காத்திரமான விசாரணைகளை மேற்கொள்ள பான் கீ மூன் உடனடியாக சுயாதீனமான சர்வதேச பொறிமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2009ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் கொண்டுவரப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபை மீளாய்வு செய்ய வேண்டும்.

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையில் நீண்டகால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இவ்வறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (எ-1)

## விஷேட வகுப்பு

தமிழில் உயர் பெறுபேற்றிற்கு ஒரேவழி 'விஷேட வகுப்பு' O/L,A/L குழுவாகவும், தனியாகவும் கற்கலாம்.

அழையுங்கள்:-
0217900668
0774669841
0779385817
(4603)

## விடுதிப் பராமரிப்பாளர் தேவை

யாழ். நகரின் மையத்தில் இயங்கும் விருந்தினர் விடுதிக்கு இரவு, பகல் பராமரிப்பாளர்கள் (ஆண்கள்) தேவை. உடன் நேரில் வரவும்.

இல. 824, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 0774528818
(4605)

## சேவை முகவர்
### வீடு காணி விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதியில் களஞ்சியசாலைக்குரிய கட்டிடம், நுணாவில் A9 றோட்டிலிருந்து 1000m தூரத்தில் 21பரப்பு தென்னம் காணி, இந்து மகளிர் வீதி, கந்தர்மடம், பழம் வீதி, மணல்தறை லேன், கோண்டாவில், வைமன் றோட், உரும்பிராயில் 9 பரப்பு ஆகிய இடங்களில் விற்பனைக்கு உண்டு. யாழ்., நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு :- சுந்தரம்
(4606) 021 222 9177, 0774819801

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் சகல வசதிகளையுமுடைய (A/C, Non A/C Room) வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு :- 0776474365
0774442730
(4604)

## ஊரெழு கிழக்கு நாவலம்பதி ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஆலய பூங்காவன உற்சவப் பெருவிழா

17.04.2011 இன்று மாலை 3 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகும். தொடர்ந்து திருவிளக்கு பூசை மற்றும் பூங்காவனத் திருவிழா என்பன நடைபெற்று இரவு 8.30 மணிக்கு விஷேட நாதஸ்வரத் தவில் கச்சேரி நடைபெறும்.

(01) கோண்டாவில் நாதஸ்வர மாமேதை இசை உலக சக்கரவர்த்தி இசைஅருவி V.K. பஞ்சமூர்த்தி புதல்வர் இசை இளவரசு V.K.P.குமரேஸ்

(02) அகில உலகப் புகழ் நாதஸ்வர மேதை நாதஸ்வரச் சக்கரவர்த்தி V.K.கானமூர்த்தி அவர்களின் புதல்வர் V.K.K. கிருஸ்ணதாசன் குழுவினர்

(03) இலங்கை புகழ் நாதஸ்வர வித்துவான் நாதவேந்தன் இசை உலக சக்கரவர்த்தி S.பாலமுருகன்

தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள தவில் மேதை கவிச்சக்கரவர்த்தி கலைமாமணி சிறப்பு தவில் கலையரசு K.G. கல்யாணசுந்தரம் அவர்கள் கலந்து சிறப்பிப்பார்.

ஒரே மேடையில் கான மழை வழங்க இருப்பதால் அனைவரையும் அன்புடன் வருக வருக என அழைக்கின்றார்கள்.

(C-2987) ஆலய பரிபாலன சபையினர்

# யாழ் மண்ணில்...................
# Laptop இற்கான
## பிரத்தியேக காட்சியறை 18/04/2011 முதல்
# LAPTOP ZONE
## 75k.k.S Road Jaffna

**HP Pavillion G6-1021TX (LQ895PA)**
Intel Core i5 - 480M 2.66GHz
2GB DDR3 SDRam
640 GB HDD
15.6"HD LED Display
DVD Writer Ligt Scribe
WLAN & Bluetooth
FREE Windows
92500/=

**HP G62-460TU (LK421PA)**
Intel Core i3 2.66GHz
2GB DDR3 SDRam
320 GB HDD
15.6" HD LED Display Webcam
DVD Writer Ligt Scribe
WLAN & Bluetooth
5-IN-1 Digital Medea Reader
FREE Windows
72500/=

**HP G62-453TU (XV946PA)**
Intel Core i5 2.66GHz Turbo Boost up to 2.93GHz
2GB DDR3 SDRam
500 GB (7200RPM) HDD
15.6" HD LED Display Webcam
DVD Writer Ligt Scribe
WLAN & Bluetooth
5-IN-1 Digital Medea Reader
FREE Windows
83000/=

**Compaq 620 (WT9004PA)**
Intel Core2Duo T7400 2.10GHz
2GB Ram
320 GB (SATA) HDD
15.6" HD LED Display Webcam
DVD Writer
WLAN & Bluetooth
FREE Windows
58500/=

**HP G62-362TU (XV680PA)**
Intel Core i3 370M 2.4GHz
2GB DDR3 SDRam
320 GB (5400RPM) HDD
15.6" HD LED Display Webcam
DVD Writer Ligt Scribe
WLAN & Bluetooth
5-IN-1 Digital Medea Reader
FREE Windows
71000/=

**HPG-62-363TU (XV68PA)**
Intel Core i5460M 2.53GHz With Turbo Boost up to 2.93GHz
2GB DDR3 SDRam
500 GB (7200RPM) HDD
15.6" HD LED Display Webcam
DVD Writer Ligt Scribe
WLAN & Bluetooth
5-IN-1 Digital Medea Reader
FREE Windows
82000/=

**HP G42-369TU (XV601PA)**
Intel Core i3 2.4GHz
2GB DDR3 SDRam
320 GB (5400RPM) HDD
14" HD LED Display Webcam
DVD Writer
WLAN & Bluetooth
5-IN-1 Digital Medea Reader
FREE Windows
72000/=

**HP G42-370TU (XV602PA)**
Intel Core i5 2.53GHz
With Turbo Boost up to 2.8GHz
2GB DDR3 SDRam
500 GB (7200RPM) HDD
14" HD LED Display Webcam
DVD Writer Ligt Scribe
WLAN & Bluetooth
5-IN-1 Digital Medea Reader
FREE Windows
81000/=

(C-2989)

Jana Video & Photo
VIDEO EDITING · ALBUM DESIGNING · BANNER DESIGNING · VHS-DVD-VCD · NET CALL · PHOTO COPY · SCANNING · FAX
T.P:0770731654,0779408227

ஸ்ரீ விநாயகர் பார்மசி
இல.168, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
No 168, K.K.S Road, Jaffna



## நண்பர்களின் போர் FIGHT OF FRIENDS
## A2K அணி சமர் LSC அணி

இடம் : மைதானம் (லோட்டஸ் வீதி) பிரதம விருந்தினர் திரு க.கந்தவனச்செல்வன்
காலம் : 17.04.2011 இன்று (ஞாயிறு) 8.30am (அதிபர் - கொ/தானப்பண்டித வித்தியாசாலை)

எமது விளையாட்டுக்கழகத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற "நண்பர்களின் போர்" துடுப்பாட்டப் போட்டியின் 4வது வருட போட்டியில் கலந்து உற்சாகமளிக்குமாறு சகல கிரிக்கெட் ஆர்வலர்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

....... லோட்டஸ் விளையாட்டுக்கழகத்தினர், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை ....... (C-2990)

சிவன் மோட்டோர்ஸ்
Dulux AGENT

HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
திருநெல்வேலிக் கிளை
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்




# மரண அறிவித்தல்
## திருமதி கிருபானந்தன் சுமனேஸ்வரி

சுன்னாகம் மேற்கு கொத்தியாவத்தையை பிறப்பிடமாகவும், டென்மார்க்கில் வசித்து தற்போது லண்டனில் வசித்தவருமாகிய கிருபானந்தன் சுமனேஸ்வரி 11.04.2011 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், கிருபானந்தனின் அன்பு மனைவியும், சகானா, மகீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், குலகுணேஸ்வரி, அருணேஸ்வரி, கமலேஸ்வரி, குமார் (லக்ஷ்மி விலாஸ்), இந்திரகுமார், நந்தகுமார் (லண்டன்), சசிந்தினி (லண்டன்), ராஜ்குமார் (திருக்குமரன் இரும்பகம்), திருக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2011) ஞாயிற்றுக்கிழமை லண்டன் நேரப்படி 9.30-12.30 மணிக்கிடையில் Hgndon Trematorium (North chapel), Holdrh Hill Road, London NW 7 INB, United Kingdom என்ற விலாசத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் கோவிலடி, சுன்னாகம்.
தொ.பே.இல : 021 2241610

தகவல்:
குமார் (சகோதரன்)

(4607)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.